பக்கங்கள்: பன்னிரண்டு
istered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

விலை ரூபா.7.00
சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 14 | திங்கட்கிழமை | (26-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 129

### நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும்

## அரசியலமைப்பை மாற்றும் முயற்சிக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம்

### தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் மாவை. சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, பிரதமர் பதவியைத் தனதாக்கிக் கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் அமைப்பை மாற்றும் முயற்சிக்கு நாம் ஒருபோதும் ஆதரவு வழங்க மாட்டோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சியின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், 'முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராசா, வீ.ஜீ.தங்கவேல், பொ.கனகசபாபதி, மருதூர் வாசனார் உட்படப் பல கட்சிப் பிரமுகர்கள் பங்குபற்றியிருந்தனர்.

நூற்றுக்கணக்கான கட்சி உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் பங்குபற்றியிருந்த இப் பொதுச் சபைக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாரம் சீனாவிற்கு விஜயம்

### இந்தியாவிற்கும் செல்வார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இவ்வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

சீனா நகரமான கங்காரியில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார மற்றும் சமூக சாதனையாளர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அமைச்சர் அங்கு செல்லவுள்ளார்.

இதேவேளை, சீன விஜயத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து இந்தியாவுக்கும் செல்லவுள்ளார். இந்தியாவுக்குச் செல்லும் அவர், இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா மேலதிக பங்களிப்பு வழங்கவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முன்னர் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அமைச்சர் ஒருவர் வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### சமாதான முயற்சியைத் தொடர

# நோர்வேக்கு ஜனாதிபதி அழைப்பு

# ஜே. வி. பி. மௌனம் சாதிப்பு!

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தத்தைக் கோரியுள்ள ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எதுவித கருத்தையும் தெரிவிக்கவிரும்பவில்லையென கட்சியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மைக்குச் சற்றுக் குறைவான ஆசனங்களைப் பெற்று ஆட்சியை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சபாநாயகர் தெரிவில் எதிரணியினரிடம் தோற்றுப்போன நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜனாதிபிதி நேரடியாகக் கோரியுள்ளமை பல்வேறு ஊகங்களையும் தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாட்டை ஐக்கியதேசியக் கட்சி வெளிப்படையாக வரவேற்றுள்ள நிலையில், ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி. கண்டனத்தையோ, எதிர்ப்பையோ இதுவரை தெரிவிக்கவில்லை.

விடுதலைப் புலிகளும் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரமுடைய இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க விரும்புகிறார்கள் என்றும் செய்திகள் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைகள் அமைச்சர் குடாநாட்டிற்கு திடீர் விஜயம்

### படை அதிகாரிகளுடன் மந்திராலோசனை

(யாழ்ப்பாணம்)

மாகாணசபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சர் ஜானக பண்டார தெனனக்கோன் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கிய அமைச்சர் இராணுவப் பாதுகாப்புடன் நயினாதீவிற்குச் சென்றார்.

நயினாதீவில் உள்ள பௌத்த விகாரையில் வழிபாட்டை முடித்துக் கொண்டு கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். பின்னர் அங்கிருந்து யாழ். நகருக்கு வருகைதந்த அவர் படை உயர் அதிகாரிகளுடன் நீண்ட நேரம் கலந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஐ.ம.சு. முன்னணி பெரு வெற்றி

(கொழும்பு)

நடந்து முடிந்த வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 29 ஆசனங்களைப் பெற்று வடமேல் மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 20 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 2ஆசனங்களையும் பெற்றுள்ளது.

வடமேல் மாகாணசபையின் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் உள்ள தேர்தல் தொகுதிகளில் ஐ.ம.சு. முன்னணி 20 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 12 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 2ஆசனங்களையும் பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 9 ஆசனங்களையும், ஐக்கியதேசி

(12ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்கத் தூதுவர் யாழ். வருகை

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெலசி லங்ஸ்ரேட் நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அமெரிக்க இராணுவ மருத்துவப் பிரிவினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து நடத்தப்படவுள்ள இலவச வைத்திய சேவையை ஆரம்பித்துவைக்கும் முகமாகவே இவரின் யாழ்ப்பாண விஜ

(12ஆம் பக்கம் பார்க்க)

## தன்னை எம்.பியாக நியமிக்குமாறு அனுருத்த ரத்வத்த கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த மீண்டும் பாராளுமன்றம் செல்லும் நோக்குடன் தன்னையும் ஐ.ம.சு. முன்னணியின் தேசியப் பட்டியலில் நியமிக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். ஜனாதிபதி தான் புதிய அரசியல் அமைப்புத் திருத்தத்தை அறிமுகப்படுத்த வசதியாக சட்டத்தரணி ஒருவரை தேசியப் பட்டியலில் நியமிக்க திட்டமிடுகிறார் என வெளியான அறிக்கைகளை அடுத்தே அனுரத்த ரத்வத்தை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தான் மேற்கொள்ளவுள்ள அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு உதவி புரியக்கூடிய சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரையே நியமிக்க உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதற்காக ஜயம்பதி விக்கிரமரட்ணவையும் விஜயதாச ராஜ

(12ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் இருப்பதனாலேயே மகாவலி அமைச்சை ஜே.வி.பி கேட்கிறது

### சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் அச்சம்

(கொழும்பு)

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமாக பெருமளவு ஆயுதங்கள் இருப்பதால்தான் ஒருவேளை அந்த அமைச்சைத் தமக்குத் தரும்படி ஜே.வி.பியினர் விடாப்பிடியாக உள்ளமைக்குக் காரணமாக இருக்கலாம் என சுதந்திரக் கட்சியினர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் பேசிய மைத்திரிபால சிறிசேன இந்த அமைச்சுப்பொறுப்பை ஜே.வி.பியினருக்கு வழங்கினால், இந்த அமைச்சுக்குச் சொந்தமாகவுள்ள பெருமளவு ஆயுதங்கள் மார்க்ஸிஸவாதிகளான ஜே.வி.பியினர் மூன்றாவது தடவையாக நாட்டில் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவக்கூடும் என்ற காரணத்திற்காகவே ஜனாதிபதி இந்த அமைச்சை இவர்களிடம் கையளிக்க அஞ்சுகிறார் எனத் தெரிவித்தார்.

தற்போது மகாவலி அமைச்சின்கீழ் 450 ரி-56 துப்பாக்கிகள், 136 துப்பாக்கிகள், 23 ரி-59 சைனீஸ் பிஸ்ரல்கள், 23 மோஸ்பேக் துப்


(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைமைச் செயலக உப அலுவலகம் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தின் உப அலுவலகம் மட்டக்களப்பு இலுப்பையடிச்சேனையில் திறந்து வைககபபட்டுள்ளது. இதற்கு பொறுப்பாக மார்சல் என்பவரை தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நியமித்துள்ளார்.

இந்த உப அலுவலகத்தினூடாக தலைமைச் செயலகத்தினூடான தொடர்புகளை பொதுமக்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்று தெரிவிககப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தின் உப அலுவலகமாக பிராந்திய மட்டத்தில் இலுப்படிச் சேனையிலேயே முதலாவது அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அப்பாறை மாவட்ட அரசியல் துறை தலைமை அலுவலகம் தம்பிலுவில் கிராமத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். ஏற்கனவே அக்கரைப்பற்று சாகமம் வீதியில் இயங்கி வந்த மாவட்ட அலுவலகம் அக்கரைப்பற்று பிரதேச அலுவலகமாக இயங்குமென்று அவர் தெரிவித்தார்.(ச)



ஓய்வுபெற்ற அதிபர் சி.கே.கந்தசாமியின் மறைவு குறித்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வு.

# மாணவர்களின் பின்புலம் அறிந்து கல்விப் பணியாற்றிய பெருந்தகை

## சி.கே.கந்தசாமியின் மறைவுக்கு கல்லூரி அதிபர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பணியாற்றிய முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமி அவர்களின் மறைவு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பு ஆகும்.

இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் அமரத்துவமடைந்த முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமி அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிறந்த ஆசிரியராக, ஆளுமை திறன்மிக்க அதிபராக விளங்கிய சி.கே.கந்தசாமி அவர்கள் இரு மொழியில் புலமை பெற்றவராக விளங்கினார். தமிழ்த் தேசிய உடையணிந்து கல்விச் சமூகத்துக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த அவர், மாணவர்களின் பின்புலத்தை அறிந்து, சமூக ஒருங்கிணைப்புடன் தனது அதிபர் பணியைத் திறம்பட ஆற்றி எல்லோரினதும் பாராட்டைப் பெற்றவர்.

அவரின் காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி, பலவழிகளிலும் முன்னேற்றமடைந்தது என்றார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் அதிபர்களான சுடர் இ.மகேந்திரன், அ.பஞ்சலிங்கம், முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், கோப்பாய் ஆசிரியர் பயிறசிக் கலாசாலை அதிபர் ஸ்ரீகந்தமூர்த்தி, ஓய்வு பெற்ற ஆசிரியர் குணபாலசிங்கம், பழைய மாணவர் சங்கச் செயலாளர் செல்வநாதன் உட்படப் பலரும் உரையாற்றினர். (ந)

# பிஜீர் குளத்து மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

புத்தளத்தில் உள்ள மீள் குடியேற்றத் திட்டமான பிஜீர் குளத்தில் வாழும் 30 குடும்பங்களுக்கு காணியும் வீடும் தருவதாகக் கூறி முன்னைய அரசின் ரெப்பியா அதிகார சபையினால் வழங்கப்பட்ட 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதிக்கு கடித மூலம் அறிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பிஜீர் குளத்தில் வாழும் 30 குடும்பங்களுக்கு காணியும், வீடும் பெற்றுத்தருவதாகக் கூறி அது தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டன.

பின்னர் 17 குடும்பங்களுக்கே காணியும் வீடுகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சில நாட்களின் பின்னர் அந்தப் 17 குடும்பங்களுக்கும் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் காசோலை வழங்கப்பட்டு பின்னர் அவை மீளப்பெறப்பட்டன.

அத்துடன் அந்தப் 17 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட காணிகளின் உறுதிகளும் அரச அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டன.

எனவே இத்தகைய ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகளை உடனடியாக விசாரணை செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60,10)

# முதியோரின் அறிவுரைகளே இளையோரை நெறிப்படுத்தும்

சமுதாயத்தில் ஒருவர் தன்னை முதியோராக இனங்காட்டிக்கொள்ள விரும்ப மாட்டார். இருந்தபோதும் ஒவ்வொருவரையும் முதுமை வந்து ஆட்கொள்கிறது. முதுமைக் காலத்தில் செய்யக்கூடிய செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. அவற்றை அனேகமான முதியோர் அறிந்திருப்பதில்லை. அவற்றில் சிலவற்றைச் சுட்டிக்காட்டும் முகமாக இக் கட்டுரை எழுதப்படுகிறது.

முதலில் இக்கட்டுரையை வாசிப்போர் ஒரு விடயத்தை மனதில் கொள்ள வேண்டும். யாரையும் புண்படுத்தும் விதமாகவோ, இழிவுபடுத்தும் விதமாகவோ இது எழுதப்பட வில்லை. மாறாக மகிழ்ச்சிப் படுத்தும் நோக்குடனும் கௌரவப்படுத்தும் நோக்குடனும் தான் எழுதப்படுகிறது.

நீங்கள் கொடுக்கத்தவறும் தகவல்களில் சில உங்களின் சந்ததியினருக்கு எட்டாமல் போய்விடக்கூடும். உதாரணமாக நீங்கள் சிறுவர்களாய் இருந்தபோது சாதனைகள் பலவற்றை நிகழ்த்தியிருக்கக் கூடும். அபூர்வமான பலரைச் சந்தித்து இருக்கக்கூடும். அற்புதச் செயல்களை அனுபவித்துஇருக்கக்கூடும்.

கால ஓட்டத்தில் நீங்கள் அவற்றை மறந்து பின்னர் திருமணம் செய்து இடம் மாறி மாறி வாழ்ந்து உங்கள் சந்ததியினருக்கு அவற்றை குறிப்பாக உணர்த்தத் தவறியிருக்கக் கூடும். அவ்வாறானதொரு விடயத்தை நீங்கள் மீள நினைவு கூர்ந்து அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கோ, பேரர்களுக்கோ உணர்த்துவீர்களாயின் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார்கள்.

உங்களுக்கு பிள்ளைகளோ பேரர்களோ இல்லாமல் இருந்தாலும் உங்களைப் பராமரிப்பவர்கள் அல்லது உங்கள் அயலில் தற்போது வசிப்பவர்களுக்கு அவற்றை உணர்த்தி உதவுங்கள். அதன் மூலம் உங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கக்கூடும். நீங்கள் கொடுக்கும் விடயத்தை சமுதாயத்தில் சிலர் ஆராய முற்படக்கூடும். அப்படி ஆராய்ந்தால் அதனால் நட்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. நன்மையே ஏற்படும்.

மக்களில் நன்மையை நினைத்து நன்மையை மட்டும் செய்பவரும் உண்டு. தீமையை நினைத்து தீமை மட்டும் செய்பவரும் உண்டு. எனவே, அதனை மட்டும் கருத்தில் கொண்டு நீங்கள் தகவல்களை அளவாக - அதாவது பொருத்தமானவர்களுக்கு மட்டும் தெரிவிக்கலாம். சில முதியோரைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான சிந்தனையாக இருக்கும் என்பது உண்மை.

**சி.ஜெயகணேஷன்**
ஆசிரியர்

# முல்லை வலயக் கல்விப் பணிமனை கட்டடம் அரை குறை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக் கட்டடத்தைப் புனரமைப்பற்கு தேவையான நிதி கிடைக்கப் பெறவில்லையென அவ் வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு அரச நிதியில் இந்த வலயக்கல்வி பணிமனை அமைக்கப்பட்டது. அதன்பின்னர் இராணுவத்தினர் மேற் கொண்ட யுத்த நடவடிக்கையால் இக்கட்டப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் 2002ஆம் ஆண்டு நிக்கொட் நிறுவனத்தின் 12லட்ச ரூபாசெலவில் இக்கட்டடத்திற்கான கூரை வேலைகள மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி வலயக்கல்விப் பணிமனை கட்டடவேலைகளை முழுமையாக செய்து முடிபபதற்கு இன்னும் 60 இலட்சம ரூபா நிதி தேவைப்படுகிறது.

இந்நிதியை வழங்குதற்கு அரசோ அல்லது வேறு எந்தப் பொது அமைப்புக்களுமோ முன் வராத காரணத்தினால் கட்டடப்பணி தற்போது மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தா. (தி-64,10)

# சட்டவிரோத மணல் ஏற்றிய 10 லொறிகள் அகப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸார் சரசாலை கனகம்புளியடிச் சந்தியில் வைத்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 10 லொறிகளைக் கடந்த வாரத்தில் மட்டும் கைப்பற்றியுள்ளனர்.

இக்குற்றத்தடுப்பு நடவடிக்கையில் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பீ.ஏ.அபெயரத்ன தலைமையில் குற்றவியல் தடுப்பு இன்ஸ்பெக்டர் எரிக் றொகிதத உட்பட பொலிஸ் குழுவினர் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக ஏற்றிவரப்பட்ட மணலையும், வாகனங்களையும் பொலிஸார் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய சமயம், சட்டவிரோதமாக ஏற்றப்பட்ட மணலைப் பறிமுதல் செய்துள்ளதுடன் ஒவ்வொரு லொறிக்கும் தலா 4 ஆயிரம் ரூபா தண்டமும் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் 7க்கும் மேற்பட்ட லொறிகள் மணலுடன் தடுத்துவைக் கப்பட்டுள்ளன. (தி-16)

# சுவரொட்டிகள் ஒட்டிய இருவர் கைது

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டிவந்த இருவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பன்னிப்பிட்டியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இவ்விருவரிடமும் இருந்த ஏராளமான சுவரொட்டிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (தி-61,10)

# சாரணியத் தலைவர் பயிற்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் சாரணர் அணித்தலைவர்களுக்கான இருநாள் வதிவிடப் பயிற்சிகள் அண்மையில் நடைபெற்றன.

மாவட்டச் சாரண ஆணையாளர் ஏ.ஜெகநாதனின் மேற்பார்வையில் உதவி மாவட்ட ஆணையாளர் சாரணர் அணித் தலைவர்களுக்கான பயிற்சிகளை வழங்கினார்.

இவ்வதிவிடப்பயிற்சியில் 46 சாரண அணித்தலைவர்கள் பங்குபற்றினர். (தி-52)


**முதலாம் வருட இதய அஞ்சலி**

தோற்றம் | மறைவு

26 04 1938 | 26 04 2003



இல: 826/11. கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு,
யாழப்பாணம்.

அமரர்
**திரு. கனகசபை அரசரத்தினம்**
(ரிப்போட்டர்)
(பத்திரிகையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)
*திதி : தசமி (14.05.2004)*

ஒரு நொடியில் எமைப் பிரிந்து
ஓராண்டு ஆனாலும்
எம்மிதயம் ஆறவில்லை
திரண்டு வரும் கண்ணீரால்
அஞ்சலி செய்து உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

59, Malyons Road,
London SE 13 7xD,
U.K.

என்றும் உங்கள் நினைவுடனே,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(8365)

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண

# தேசிய அரசு அமைப்பதே சிறந்தது

## அமெ.பேராசிரியர் றொபேட் கருத்து

(கொழும்பு)

நடைபெற்று முடிநத 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலை அடுத்து, இலங்கை அரசியல் முக்கியமானதோர் கட்டத்தை அடைந்துள்ளது.

எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்து ஆட்சியமைக்கமுடியாத வகையில் உருவாகியுள்ள இவ் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின், தேசிய அரசமைப்பதே அதற்குச் சிறந்த வழியாகும் என அழுத்திக் கூறுகிறார் சர்வதேச அரசியலில் முதிர்ச்சி பெற்ற அமெரிகக இணைப் பேராசியர் டாக்டர் றொபேட் சி.ஒப்றெஸ்ட்.

கொழும்பில் உள்ள இனத்துவக் கற்கை நெறிகளுக்கான சர்வதேச நிலையததில் அண்மையில் நடை பெற்ற கருத்தரங்கொன்றில் உரை யாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இக் கருத்தரங்கில் அரசியல் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்வி மான்கள் உட்பட அரசியல் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பேராசிரியர் டாக்டா றொபேட் சி.ஒப்றெஸ்ட் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தற்போது இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும், நெருக்கடிகளும் தீர்வுக்குக் கொண்வரப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானமும் அமைதியும் ஏற்படுவதற்கு ஒரேவழி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதுதான். இதன் மூலம்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சிக்கலின்றி, சிரமமின்றி வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்ல முடியும்.

இன்றைய சூழநிலையில் தமிமீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் வழுவாது உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கிறார்கள்.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்திடம் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் பெற்றுக்கொள்வதில் விடுதலைப்புலிகள் விடாப்பிடியாகவே இருந்து வருகின்றனர். அவர்கள் தமது கொள்கையில் சிறிதும் மாற்றமடையவில்லை.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சேர்ந்து, தேர்தலில் வெற்றியீட்டிய மக்கள் விடுதலை முன்னணியினர், தமது கூட்டணிக்குள்ளும் கருத்து முரண்பட்டு நிற்பதுடன், விடுதலைப்புலிகளின் விடயத்திலும் மாறுபட்ட வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்குச் சிறந்ததோர் வழி தேசியஅரசு ஒன்றை அமைப்பதேயாகும் இதற்கு அனைத்து அரசியல் கடசிகளும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும். குறிப்பாக சிறுபாணமைச் கடசிகள் அனைத்தும பேதங்களைக் கைவிட்டு ஒன்றிணைந்து தமது ஆதரவை வழங்க வேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## நூலகத்தில் மாணவர்களுக்கு வசதி

(நவாலி)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக கோட்டை பொது நூலகத்தில் இவ்வருடம் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதி பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் பாடத்திட்டத்தோடு சம்பந்தப்பட்ட நூல்களை மாணவர்களுக்கு நூலகத்திலிருந்தே பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன, பாடத்திட்டத்தோடு சம்பந்தப்பட்ட சஞ்சிகைகளும் மாணவர்களின் பாவனைக்கெனத் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை. க.பொ.த.(சா/த) மற்றும் (உ/த) மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-102)

# கிங்ஸ்லியின் கடிதத்தை ஏற்கவில்லை

# இலங்கை தமிழரசுக் கட்சி மறுப்பு

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பின்னர் இராஜினாமா செய்துகொண்ட கிங்ஸ்லி இராசநாயகத்தின் இராஜினாமாக் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஏற்றுக்கொள்ளவில்லை என வெளிவந்த செய்திகளை தமிழரசுக் கட்சி மறுத்துள்ளது.

கிங்ஸ்லி இராசநாயகத்தின் கைப்பட தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட கடிதம் தன்னால் உறுதிப்படுத்தப்பட்டு பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயல்ளர் நாயகம் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசியல் அமைப்பில் 66வது விதிகளின் படி ஒருவர் தன் கைப்பட எழுதிய கடிதத்தை ஏற்காது விட முடியாது. ஏற்கனவே சில தவ்றுகள் இடம்பெற்றதனால் உரியவர்களுடன் பாராளுமன்ற செயலாளர் தொடர்புகொண்டு நேரடியான சில உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளவேண்டி யதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றார். (தி)

## தமிழ் மாணவர்கள் ஒன்றிய ஏற்பாட்டில்

# அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பில்

# கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள

(தனங்கிளப்பு)

வாதரவத்தை அக்காசசி எழுசசிக் குடியிருப்பில் வசிக்கும் வறிய மாணவர்களுக்கு கோப்பாய் பிரதேச தமிழ் மாணவர் ஒன்றியமும், கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து அப்பியாசக் கொப்பிகளை இலவசமாக வழங்கியுள்ளன.

அததுடன் அப்பகுதியில் உள்ள பாடசாலை செல்லாத மாணவர்களையும் இனம்கண்டு கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக்கூறும் பணிகளிலும் இவ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்புக் கிராமத்தலைவர் சுந்தரவடிவேல் தலைமையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில், கருத்துரைகளை கோப்பாய் பிரதேச தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் விஜிதரனும், கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச செயலாளர் ந.சிவகடாச்சமும், கோப்பாய் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் து.கிரியும் வழங்கினர்.

அததோடு கோப்பாய் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் நடாத்தப்பட்டுவரும் இரவு நேரக்கற்றல், கறபித்தல் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பணியிலும் இளைஞர் குழுக்கள் பல முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-37)

# அகில இலங்கை ரீதியில்

# கணனித்துறை மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் கணனித்துறை குறித்து மதிப்பீடு ஒன்றை குடிசன புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த ஜனவரிமாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மதிப்பீடு எதிர்வரும் யூன் மாதமளவில் பூர்த்தியடைந்துவிடுமென திணைக்களத்தின் பணிப்பாளர். ஏ.ஜி.டபிள்யு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்டுவரும் இந்த மதிப்பீட்டில் நகர்ப் புறங்கள், கிராமப் பகுதிகள், பெருந்தோட்டப் பகுதிகள் ஆகிய பிரதேசங்களில் வாழும் பல்வேறு பராயங்களைக் கொண்டவர்கள் மத்தியில் இருந்துவரும் கணனி அறிவு பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

அத்துடன் மின்னஞ்சல் மற்றும் இணையத்தளம் ஆகியவற்றின் பாவனை குறித்தும் மதிப்பீடு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

# தந்தை செல்வாவின் நினைவுநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 27ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டையில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுர்க்கத்திலும் பி.ப.3.30 மணிககு யாழ்ப்பாணம் பல்கலைக கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளன.

மலரஞ்சலியுடன் ஆரமபமாகும் காலை நிகழ்வுகளைத் தொடர்ந்து, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள மாலை நிகழ்வுகளின் வரிசையில் "தமிழ்த் தேசியமும் தேர்தல்களும்' எனும் விடயம் குறித்து புவியியற்துறை பேராசிரியர் பொபால சுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார்.

அத்துடன் கவிஞர் தில்லைச் சிவன் எழுதிய "தந்தை செல்வா காவியம்" எனும் நூல் அறிமுகம் இடமபெறவுள்ள அதே நேரம், தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத்தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசனின் நூல் அறிமுக வுரையும் இடம்பெறவுள்ளது. (தி-18)

# கெவுளியா கிராம மக்கள் குடியமர்த்தக்கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கெவுளியா மடுக் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 19வருடகால்மாக குருக்கல் மடம், கழுக்காவளை போன்ற இடங்களில் தற்காலிகமாக வசித்துவரும் மக்கள் தங்களைச் சொந்த இடங்களில் மீளக குடியமர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கெவுளியா அகதிகள் புனாவாழ்வுக் கழகத்தின் தலைவ் கே. பாலசுந்தரம்,ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் இலங்கைக்கான வதிவிடபபிரதிநிதிக்கு இது தொடபாக கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

கெவுளியாக்கிராமத்தில் வசித்துவந்த தமிழ்மக்கள் 1985ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக அவ்விடங்களை விட்டுவெளியேறினர்.

சுமார் 65குடும்பங்கள்ச் சேர்ந்த 250 பேரும்,1990ஆம் ஆண்டில் மேற்க் கொள்ளப்பட சமாதான முயற்சிகளின் போது மீளகுடியமர முற்பட்ட வேளையில் படைத்தரப்பினர் இதற்கு அனுமதி வழங்கவில்லை.

கடந்த 2வருடங்களாக சமாதானம் நடைமுறையில் இருந்த போதும், கெவுளியாக் கிராம மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிககை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை, இதனால் புனர்வாழ்வுக் கழகமும், யூ.என்.எச்.சி.ஆரும இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (தி-63)

## ஹெல உறுமயவிலிருந்து நீக்கினால்

# இரு பிக்குகளையும் தேசியப்பட்டியல்

# எம்.பியாக்க ஐ.ம.சு.மு. முடிவு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவினர் எமக்கு ஆதரவளித்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட இரு பிக்குகளையும் கட்சியிலிருந்து இடைநிறுத்தினால் தாம் அவர்கள் இருவரையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தேசியப்பட்டியலில் நியமிக்கவிருப்பதாக ஐ.ம.சு.மு. தெரிவிததுள்ளது.

ஐ.ம.சு.மு.சார்பில் சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்ட டி.யு.குணசேகாவுக்கு ஆதரவளித்த பிக்குகளுக்கு எதிராக ஹெல உறுமயவினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளனர். இதேவேளை, மேற்படி இருவரையும் தேசியப் பட்டியலில் நியமிக்கும் தீர்மானம் சபாநாயகர் தேர்தல் பற்றிக் கலந்துரையாடவென நடாத்தப்பட்ட கூட்டத்தில் வைத்து எடுக்கப்பட்டது.

அத்துடன் இத்தேர்தலில் டி.யு.குணசேகர வெல்வதற்கு எந்த விதமான பொருத்தமான நடவடிககைகளும் எடுக்கவில்லை என்றும இக்கூட்டத்தில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இதேவேளை, ஐ.ம.சு.மு.பிரதி சபாநாயகராக தமது தேசியப் பட்டியல் எம்.பியான கீதாஞ்சன குணவர்த்தனவின் பெயரை சிபார்சு செய்யவுள்ளது. சபாநாயகர் தெரிவு ஒருநாள் முழுவதும் நடைபெற்றதால், பிரதிச் சபாநாயகர் தெரிவும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவும் எதிர்வரும் மே மாதம் 18 வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

ஆனால் மேறபடி இருபதவிகளுக்கும் பொருத்தமானவர்களை தாம்இன்னும் தீர்மானிக்கவில்லை என ஐ.ம.சு.மு.தெரிவித்துள்ளது. (தி-06)

# வெசாக் தினத்தன்று பூரண சந்திர கிரகணம்

(கொழும்பு)

வெசாக் தினமான எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூரண சந்திர கிரகணம் இடமபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு 11.51க்கு ஆரம்பமாகவுள்ள இச்சந்திர கிரகணமானது மறுநாள் அதிகாலை 5.10 மணிவரை நீடிக்குமெனத் தெரிவித்துள்ள ஆர்தர் சி.கிளாக் விஞ்ஞானமையம், இம்முறை வெசாக் தினம் மிகவும் அபூர்வமானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமையவுளளது எனவும் கருத்து வெளியிட்டுள்ளது.

இச் சந்திர கிரகணம் நிகழ்வதனை 4ஆம் திகதி இரவு 12.45 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலைவரை சாதாரணமாகப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

எனினும் 5ஆம் திகதி அதிகாலை 3.08 மணிவரை நீடிக்கும் சந்திர கிரகணத்தை தொலைநோக்கியூடாகப் பார்வையிடும் போது, சந்திரனுக்கு அருகாக 2வால் நட்சத்திரங்கள் காணப்படுவதனையும் அவதானிக்கலாம் எனவும் நவீன தொழில்நுட்ப விடயஙகளுக்கான ஆராயசசி நிலையமான ஆர்தர் சி.கிளாக் விஞ்ஞான மையம் மேலும் கருத்து வெளியிட்டுள்ளது. (உ-18)

## இன்று ஒரு தகவல்

# நிகழ்காலம் நம் கையில்

ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர் 3ஆயிரத்து 250 பேரை அவர். சந்தித்தார். அவர்களிடம் ஒரே கேள்வியைக் கேட்டார். "நீங்கள் எதற்காக வாழ்கிறீர்கள்?" இது அவர் கேட்ட கேள்வி. அதில் 92 சதவீதம் பேர் ஒரே மாதிரியான பதிலையே கூறினார்கள். "நாளைக்கு நன்றாக வாழ்வ தற்காக நம்பிக்கையுடன் இன்று காலம் தள்ளுகிறோம்" என்பது தான் அவர்களின் பதில்.

இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ்பவர்களை விட சந்தோஷமாக வாழப்போகிறோம் என்ற நம்பிக் கையுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் அதிகம். எதிர்காலத்தில் நிம்மதியாக இருக்கவேண்டும் என்ப தற்காக இன்று அவஸ்தைப்படுவோரே அதிகம். ஆனால் உண்மையில் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். எதிர்காலம் என்பது உண்மையில் கிடை யாது. இதை நான் ஏதோ சித்தபிரமை காரணமாகச் சொல்வதாக நினைத்துவிடக்கூடாது. எதிர்காலம என்பது ஒரு கற்பனை.அதில் நீங்கள் வாழமுடியாது. அதில் நீங்கள் வாழும் போது அது உங்களுக்கு நிகழ்காலமாகிவிடுகிறது.

இப்போது உதாரணத்திற்கு அடுத்தவருடம் இதே மாதம், இதே திகதி அந்த நாள் இப்போது நமக்கு எதிர்காலம் அதைக் கற்பனையில் தான் பார்க்க முடியும். அடுத்த வருடம் அந்த நாள் வந்துவிட்ட தென்று வைத்துக் கொள்ளுங்கள் அன்று நாம் வாழப்போகிறோம். நாம் வாழும் அந்த நாள் நமக்கு நிகழ்காலம் சரி இப்படியே கூறிக்கொண்டு சென்றால் எனக்கு இன்று என்னமோ ஆகிவிட்டது என்று யோசிப்பீர்கள். அதனால் இந்தக்கதையைக் கேளுங் கள்.

ஒரு பெரிய செல்வந்தர் முகத்தை மிகவும் கம்பீரமாக வைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார். அதே நேரம் மிகவும் தீவிரமான சிந்தனையிலும் இருந்தார். அவரது மனைவி இவரைப் பார்த்தார். "என்ன என்னவோ மிகவும் தீவிரமாக சிந்திப்பது போல் தெரிகிறது? இன்று இவ்வளவு தாமதமாக வருகிறீர களே என்ன காரணம்?" என்று கேட்டார்.

"அதுவர் நமது 7 தலைமுறைகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைப் பாடிக்கொண்டிருந்தேன். அது தான் நேரத்துடன் வீடு வரமுடியவில்லை. எனது சிந்தனைக் கும் அது தான காரணம்" என்றார் அவர். அவரது மனைவியோ அறிவாளி. அதனால் வரப்போகும் 7 தலைமுறைகளைப் பற்றி இவர் கவலைப்படுவது அறியாமை என்று அவர் நினைத்தார்.

சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு மொதுவாகக் கண வரிடம் சென்றார். "இதோ பாருங்கள்! நமது வீட்டுக்கு வெளியே குடிசையில் ஒரு சந்நியாசி இருக்கிறார். நீங்கள் அவரிடம் போய் இந்த உணவை கொடுத்துவிட்டு வாருங்கள்" என்றார். இவர் வேண்டா வெறுப்புடன் கிளம்பினார். அந்த சாமியாரிடம் போனார். சந்நியாசி நிமிர்ந்து பார்த்தா. செல்வந்தர் கையில் சாப்பாடு இருந்தது. "நான் ஏற்கனவே எனது சாப்பாட்டை சாப்பிட்டு முடித்து விட்டேன்" என்றார் சந்நியாசி.

"அபபடி என்றால் இதை பின்னேரச் சாப்பாட்டிற்கு வைத் துக்கொள்ளுங்கள்" என்றார் இவர். சந்நியாசி மீண்டும் நிமிர்ந்து பார்த்தார். புன்முறுவலுடன் சொன்னார் "பின் னேரச் சாப்பாடு பற்றி நான ஏன் இப்போதே கவலைப்பட வேண்டும்?" என்றார்.

சந்நியாசியின் இந்தச் செயல் பணக்காரரின் சிந் தனையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ணியது. யோசித்துப் பார்த்தார். "பின்னேரச் சாப்பாட்டைப் பற்றிக் கூடக் கவலைப்படாத இந்த சந்நியாசி தான் எவ்வளவு விசித்திரமானவர் நானோ 7 தலை முறைக்காக இப்போதே ஏற்பாடு செய்கிறேன். இவரோ அடுத்தவேளையைப் பற்றிக் கூடங்கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறாரே. செல்வந்தர் முகத்தில் சிரிப்பு வந்தது.

இந்தக் கதையில் இருந்து நாம் புரிந்துகொள்ள வேண் டியது என்னவென்றால் நிகழ்காலம் மட்டும் தான் நம்மிடம் உள்ளது. அதில் நல்லபடியாக நாம் வாழ வழிகாண வேண்டும். அதற்காக எதிர்காலம் பற்றிய பொறுப்பு நமக்குத் தேவையில்லை என்று நினைக் கக்கூடாது. அதுவேறு. இதுவேறு.

இந்தத் தத்துவத்தை அரைகுறையாகப் புரிந்து கொண்ட ஒருவர் என்ன செய்தார் தெரியுமா? தத்து வத்தைச் சொன்னவரிடம் நூறு ரூபா கடன் வாங்கினார். இவர் கடன் கொடுத்து விட்டு "எப்போது திருப்பித் தரு வீகள்? என்று கேட்டார். எதிர்காலத்தில் திப்பித் தரு வேன். அதைப்பற்றி இப்போதே எதற்கு நினைக்க வேண்டும் மறந்துவிடுங்கள்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# நோர்வே அரசின் உயர்மட்டக் குழு அடுத்த வாரம் இலங்கை விஜயம்

## சமாதான முயற்சிகள் குறித்து ஆராயும்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த் தைகளை முன்னெடுக்கும் மூன்றாம் தரப்பு அனுசரணை யாளர் பணியை மேற்கொள்ளும் வகையில் நோர்வே நாட்டின் உயர்மட்டக்குழு அடுத்த மாதம் முதல் வாரத் தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகளை தொடருவதற்கு அனுசரணையாளராக செயலாற்ற வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேப் பிரதமர் க்ஜெல் மக்னெனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை நோர்வேப் பிரதமர் க்ஜெல் மக்னென் ஏற் றுக்கொண்டதுடன்,வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன், விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் ஆகியோரை அடுத்த மாதம் முதல் வாரத் தில் இலங்கைக்கு அனுப்ப இருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கொழும்புக்கு வருகை தரவிருக்கும் நோர்வேத் தூதுக் குழுவினர் முதலில், கிளிநொச்சிக்கு சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்கள் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் கடந்த வருடம நவம்பர் மாதம் ஜனாதிபதி திடீரென 3 அமைச் சுக்களைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட அர சியல் நெருக்கடியை அடுத்து நோர்வே தனது அனு சரணையாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண் டமையும் குறிப்பிடததக்கது. (தி-121)

# சுதந்திர முன்னணியின் வெற்றி மாகாணசபைத் தேர்தலில் ஊர்ஜிதம்

## விமல் வீரவன்ச பெருமிதம்

(கொழும்பு)

13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை மேலும் ஊர்ஜிதப்படுத்தும் வகையில் வடமேல் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அமைந் திருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.



தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று அவர் வழங்கிய விசேட பேட்டியின் போது இதனைத் தெரிவித்தார்.

அசசெய்தி நிறுவனத்திற்குத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை இந்த வடமேல் மாகாண சபையில் பெற்ற வெற்றி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வடமேல் மாகா ணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெறவேண்டும் என மக்கள் நீண்டகாலமாகக் காத்திருந்தனர்.

இது நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாகாண சபைத்தேர்தல்கள் மூலம் நிறைவேறியுள்ளது.

பாராளுமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் ஐக்கிய தேசிய முன்னணிக்கே ஆதரவு உண்டென அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலிலும் அக்கட்சியின் முக் கிய தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன னணி வெற்றி பெற்றது. அத்துடன் வடமேல் மாகா ணசபைத் தேர்தல்களிலும் அக்கட்சியே வெற்றி பெற்றுள்ளது. இவற்றில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேலும் வெற்றி பெறும் என்பது தெளிவாகிறது என்றார். (தி-121)

## இராசி பலன்

**26.04.2004**

**(சித்திரை 14, திங்கட்கிழமை)**
**ஸ்ப்தமி முழுவதும்**
**புனர்பூசம் அமிர்தம் மு.இ.11-36வரை**
**இராகுகாலம் 7.29-8.59 வரை**
**சுபநேரம் 11.59-1.29 வரை**

**மேடம்**
கூட்டு முயற்சி, சகோதரர்உதவி, சுவாரஸ்யம் சுபநிகழ்வு.

**இட்பம்**
மாதர்நட்பு, காரிய தாமதம், உணர்ச்சி வசப்படல், வீண்செலவு.

**மிதுனம்**
மனச் சஞ்சலம், திடீர்நன்மை, பிரயாணம், புதியதிட்டமிடல்.

**கடகம்**
புத்திசாதுரியம், சொத்துக்களால் நன்மை, புதியதிருப்பம், பணவிரயம்.

**சிங்கம்**
பெருமையடைதல் எடுத்தகாரியம் கைகூடும், கலத்துரையாடல், தன லாபம்.

**கன்னி**
அதிகபிரயாசை, அதிகாரம், பிரயாணம், களஸ்திர நன்மை.

**துலாம்**
பித்தரோகம், கட்டுப்பாடு, பிதாசிந்தை, நல்ல முயற்சி.

**விருச்சிகம்**
அமைதிக் குறைவு, வீண்பகை, உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம்.

**தனுசு**
சௌக்கியவிருத்தி, முயற்சிகைகூடும், விருந்துபசாரம், புதியசெய்தி.

**மகரம்**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, தொழில் சிந்தை, காரியநன்மை.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், யோகநிலை, காரியதாமதம் புதிய சிந்தனை.

**மீனம்**
இனசனத் தொடர்பு, காரியசித்தி, விருந்தபசாரம், தெய்வ சிந்தை.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

# தமிழீழ எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மேதின நிகழ்வுகள்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழீழ எழுச் சிப் பேரவையினரும் வவுனியாவிலுள்ள தொழிற் சங்கங்களுடன் இணைந்து மேதினத்தை வவுனியா நகரசபை மைதானத்தில் மிகப் பிரமாண்டமான முறையி லும் எழுச்சியுடனும் கொண்டாடத் தீர்மானித்துள் ளன.

நேற்று முன்தினம் வவுனியா சித்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கலந் துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வவு னியா மாவட்ட அரசியல் துறையினர், தமிழீழ எழுச் சிபுபேரவையின் முக்கிய பிரதிநிதிகள் தொழிற் சங் கங்களின் பிரதிநிதிகள் பலரும் இக்கலந்துரை யாடலில் கலந்துகொண்டனர்.

சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்கக் கோரி, தமிழ்த் தேசியத்தின் கோட்பாட்டின் அடிப்படை யில் மேதினத்தைக் கொண்டாட வேண்டும் என மேற்படி கலந்துரையாடலில் கலந்துகெண்டவர்கள் ஆலோசனை தெரிவித்தார்கள்.

இதேவேளை, அன்றைய தினம் 4.00 மணிக்கு யாழ்.வீதி, கண்டிவீதி ஆகியவற்றின் ஊடாக மேதி னப் பேரணிகள் வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடையும் என்றும், அதன் பின்னர் பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேரணிகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தலைமை தாங்குவார்கள். (தி-61,10)

# இணையம் ஊடான கல்வியில்

# நாம் பெறும் நன்மைகள்

கல்லூரிகள் மற்றும்,தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பாடம் படிக்க வசதியோ நேரமோ பணமோ இல்லாதவர்கள் அதற்கு மாற்றான அஞ்சல்வழிக் கல்வியை நாடினார்கள். வீடுநோக்கி வருகின்ற பாடங்களைப் படித்துப் பரீட்சையும் எழுதி வெற்றியும் கண்டார்கள்.இன்ரர்நெற் உலகில் (E-LEARNDNG)வந்து விட்டது. உங்கள் வீட்டுக் கணனியில் இருந்து கொண்டே இன்ரர்நெற் மூலமாக உலகின் ஏதோ ஒரு பகுதியில் உள்ள கல்வி நிறுவனததில் மாணவராகச் சேர்ந்தால் போதும் படித்துப் பட்டமும் பெற்று விடலாம்.

## சாதக பாதகங்கள்

E-LEARNDNG எனப்படுகின்ற இன்ரர்நெற் வழிக்கல்வியை பயிலும் மாணவனுக்கு என்ன சாதகங்கள், லாபங்கள் உள்ளன எனப் பார்ப் போமா னால்:

★.எப்பொழுது நேரம்கிடைக்கிறதோ அப்பொழுது இன்ரநெற் வழியாக உங்களது கல்வி நிறுவனத் தில் நுழைந்து பாடத்தைக் கற்கலாம். சாதாரணமாக பாடசாலை அல்லது கல்லூரியில் பாடிப்பதாக இருந்தால் அவர்களது நேரததுக்கு நீங்கள் அங்கு இருக்க வேண்டும். எனவே வேலையிலிருப்பவர்கள், இல்லத் தரசிகள் போன்றோர்கள் இன்ரநெற் வழிக் கல்வி கற்று தங்களது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது. நீங்கள் விரும்பிய நாளில் ,நேரத்தில் கல்வி கற்க முடியும்.

## நேரம் மீதமாகும்

பாடசாலை,தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் போது நிறைய நேரம் அங்கு பயணிப்பதற்கே செலவாகிறது. அந்த அலைச்சல், களைப்பால் படிப் பதிலும் கவனத்தைச் செலுத்த முடிவதில்லை. இன்ரநெற் வழிக் கல்வியால் எவ்வளவு நேரம் மிச்ச மாக்கிடைப்பதுடன், அதனைப் பயனுள்ளதாகக் கழிக்கவும் உதவுகிறது..

## பணம்மிகுதியாகிறது

பாடசாலையில் அல்லது தனியார் கல்லூரியில் சேர்ந்து படிக்க நிறையப் பணம் தேவைப்படுகிறது. பாடசாலை, கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பதால் புத்தகச் செலவுகள்,போக்குவரத்துச் செலவுகள் உட்பட பல செலவுகள் ஏற்படும். இன்ரநெற் வழிக்கல்வியில் இன்ரநெற் கட்டணம், தொலை பேசிக் கட்டணம், கல்வி நிறுவனத்துக்கான கட்டணம் ஆகியவை இங்கு உண்டு. ஆனாலும் இவற்றின் மொதததைக் கூட்டினால் பாடசாலை, கல்வி நிறுவனக் கல்விச் செலவைவிட மிகவும் குறைவு என்பது தெரியும்.

★நீங்கள் கல்லூரிக்குச் செல்ல முடியாமல் தவறவிட்ட பாடத்தை ஆசிரியர் உங்களுக்காக மறுநாள் போதிக்கமாட்டார். அல்லது உங்களுக்கு விளங்கவில்லை. என்பதற்காக மீண்டும் அதை நடத்திக் கொண்டிருக்கமாட்டார். இன்ரநெற் வழிக்கல்வியில் அந்தத் தொல்லை இல்லை. திரும்பத்திரும்ப அதை மீளவும் பாடித்துப்பார்க்கலாம்.

★இவ்வகையில் ஏராளமான யாடத்திட்டங்கள் உள்ளன. அவற்றில் உங்களுக்கு விருப்பப்ட்டதை உட்கார்ந்த இடத்திலிருந்தே படிக்க முடியும்.பாடசாலைக்கல்வி நிறுவனத்தில் உங்களுக்குப் பிடித்த பாடம் ஊள்ளூர் பாடசாலை /கல்வி நிறுவனத்தில் இல்லாவிட்டால் நீங்கள் அதற்காக வெளி ஊர் சென்று பயில வேண்டியுள்ளது.

★பாடங்கள் பற்றிய ஐயங்களைத் தீர்க்க பல இன்ரநெற் வழிக் கல்வி கூடங்களில் (ONLINE TUTO RS) இருப்பார்கள். அவர்களிடம்டைப் செய்தோ, பேசியோ சந்தேகங்களை களையமுடியும்.



★DISCUSSION FORUM என்ற வசதி இன்ரநெற் வழிக்கல்வியில் உண்டு. பலருடன் கலந்து பேசி சந்தேகங்களைத் தீர்க்க முடியும்.

ஓடியோ,வீடியோ போன்ற மல்ட்டி மீடியக் காட்சிகளால் பாடத்தைத் தெளிவாக இன்ரநெற் வழிக் கல்வியில் விளக்க முடிகிறது. காண்ணால பார்த்து காதுகளால் கேட்டுப் படிக்க முடி வதால் பாடங்களும் நினைவில் பசுமரத்தாணி போல் பதிந்து விடுகின்றன.

★யாரும் எளிதில் புரிந்து கொளளும்படி பாடங்கள் விளக் கப்படுவதால் தாமாகவே படித்து வெற்றி பெறமுடியும்.

## இன்ரநெற் வழிக் கல்வியில் குறைபாடுகள்

இன்ரநெற்வழிக் கல்வியினைப் பற்றி எல்லோரும் வாய் நிறையப் புகழ்ந்தாலும் அந்தக் கல்வி முறையில் குறைபாடுகள் இருக் கத்தான் செய்கின் றன. அவற் றையும் மீட்டுப் பார்போமானால்.

★.பலவிதமான ஐயங்களை இன்ரநெற் வழிக் கல்வியின் மூலம் தீர்க்க முடிவதில்லை. பாடசாலை, கல்வி நிறுவனக் கல்வி முறையில ஆசிரியரிடமே கூடப் படிக்கும் மாணவனிடமே நேரில் விளக்கம் பெற முடியும்.ஆனால் இன்ரநெற்வழிக் கல்வியின் மூலம் இத்னைப் பெற முடியாது.

★.ஏழைமாணவன் கூட அஞ்சல் வழிக் கல்வியில் சேர்ந்து படிக்க முடியும்.ஆனால் இன்ரநெற் வழிக் கல்வியில் கல்விபயில வீட்டில் கணனியும் தொலைபேசியும் அல்லவா தேவைப்படுகிறது? எத்தனை பேருக்கு இது சாத்தியமாகும்? இன்ர நெற் பிரவுசிங் நிலையத்தில் போய் பாடிக்கலாமே என சிலர் கேட்க லாம் படிப்பதற்கான சரியான சூழ்நிலை அங்கு கிடைக்காது.

★தன் முயற்சி உள்ளவர்களுக்குத்தான் இன்ரநெற்வழிக் கல்வி ஏற்றது. பாடசாலை, கல்வி நிறுவனப் படிப்பில் ஆசிரியர் நடத்தும் மாத,தவணைத் தேர்வில் வெற்றி பெற்றாக வேண்டுமே. சகமாணவர்கள் மத்தியில் நாம் கேவலப்பட்டுவிடக்கூடாதே என்ற நினைப்பில் எல்லா மாணவர்களும் அதிக அக்கறை [illegible]பார்கள். சந்தேகங்களை மற்றவர்களிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொள்வார்கள். நாளை படித்துக்கொள்ளலாம் என்ற சோம்பறித்தனம் புரிய வில்லை. ஆனால் அந்தப்படத்தை ஒதுக்கும் மனப்பான்மை இன்ரநெற் வழிக் கல்வி பயிலும் மாணவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. எது எப்ப டியிருப்பினும் கல்வி தான் முக் கியமென்ற நினைப்பு உள்ள வர்களுக்கு இன்ரநெற் வழிக் கல்வி ஏற்றது.

★மல்ட்டி மீடியா நிறைந்த பாடங்கள் உங்கள் கணனிக்கு டவுன்லோடு ஆக நேரம் பிடிக்கும். எனவே எரிச்சல், கோபம் ஏற்பட்டுவிடும்.

★இன்ரநெற் வழிக் கல்விக்கு மதிப்புண்டா என்பது சந்தேகமே. இந்தக் கல்வியால் வேலைகிடைக்குமா என்பது கேள்விக்குறியே. இன்ரநெற்வழிக் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்ற பட்டத்தினை அரசோஅல்லது பல்கலைக்கழகங்களோ அங்கீரித்ததாகவும் தெரியவில்லை. அகீகாரம் பெறாத

## நோயல்

கல்விக்கு பணம் செலவழிக்க யாரும் முன்வரமாட்டார்கள் அல்லவா?

★அந்த இன்ரநெற் வழிக் கல்வி முறை மேலைநாடுகளில் நடை முறையல் உள்ளது.தற்போது இது இலங்கையிலும் பரவிவருகிறது. பல கணனி கற்பிக்கும் நிறுவனங்கள் கற்பித்துவருகின்றன. அதிகமாக இந்தக் கல்வி முறையை இந்திய நிறுவனங்கள் வழங்குகின்றன.

பத்திரிகையில் வாசித்தோ, காதால் கேட்டோ இதனை விட்டு விடாமல். நாமும் இந்தத் தளங்களில் நுழைந்து எங்களுக்குத் தேவையான பாடங்கள் உள்ளனவா எனப்பார்த்து அதனைக் கற்று அதிலுள்ள நன்மை, தீமைகளை அறிந்துகொள்வோம். □

# நாவலர் பெருமானின் பணியை தொடர்ந்தவர் சதாவதானி

## கலாநிதி சிவலிங்கராஜா புகழாரம்

(பருத்தித்துறை)

நாவலர் பெருமானுக்கு அடுத் த படியாக தமிழையும், சைவத்தையும் வளர்க்க அரும்பணியாற்றியவர்கள் வரிசையில் மேலைப்



புலோலியூர் சதாவதானி கதிரவேற பிள்ளை முதன்மையானவர் என தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்துள்ளார்.

சதாவதானி கதிரவேற்றி பிள்ளையின் 97ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் ஆண்டுதோறும் நடாத்திவரும் இவ்விழா,நிலையத்தலைவர் எம்.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர், பருத்தித்துறை கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

சதாவதானி ஈழத்தில் மாத்திரமன்றி,தமிழ் நாட்டிலும் தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றியவர். இவர் தமிழ் நாட்டில் இருந்த போது தமிழ் நாட்டிற்கும் ஈழத்துக்கும் புலமைசார்ந்த தொடர்புகள் இருந்தன.

இதனால் தமிழ் நாட்டுமக்களும் ஈழமக்களும் பல்வேறு வகையான நன்மைகளைப் பெற்றனர். பல நூல்களை ஆக்கித்தந்த அவா, தமழ் அகராதி என்ற அரிய பொக்கிஷம் ஒன்றையும் தந்துள்ளார்.

இன்று தமிழும் , சைவமும் மிக இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கித் தவிக்கின்றன.இதனால் எமது இளைஞர் சமுதாயம் பெரும் பாதிப்புககுள்ளாகியுள்ளது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளைத தமிழ்க் கல்வியியலாளர்கள் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் தமிழும் சைவமும் வளர்ச்சியடையும .அத்துடன் எமது எதிர்காலச் சந்ததியினரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும்.

இவர் 36 ஆண்டுகள் மட்டும் தான் வாழ்ந்தாலும் அக்காலங்களில் அரும் சாதனைகளை நிலைநாட்டியுளளார். இவரது ஆய்வுகளில் ஒருவர் மட்டும் ஈடுபடமுயாது. பல்வேறு ஆய்வாளர்கள் இணைந்து ஈடுபட வேண்டும். இன்று விளையாட்டுத்துறையில் முத்தையா முரளிதரனின் சுழல் பந்து வீச்சுப் போல, அன்று சதாவதானி கதிர்வேற்பிள்ளை தமிழையும் சைவத்தையும் வளர்க்கச் செயற்பட்டார்.

ஈழத்தமிழ் அறிஞர்களில் முதனமையாளரான இவா, வடமாராட்சியின் கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுப் பாலமாகத்திகழ்ந்தவர். இவர் பற்றி இன்றைய சமூகத்திலே எழுச்சியை ஏற்படுத்துவதற்கு மேலைப் புலோலி சதாவதானி கதிர வேற்பிளளை சனசமூக நிலையம் மேலும நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா சதாவதானி கதிரவேற பிள்ளை நினைவு தினத்தையொட்டி, பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (தி-52)

# தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் வாரஇறுதியல் கிழக்கு விஜயம்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இம்மாத இறுதிப் பகுதியில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று தமிழரசுக்கட்சியின் செயலாளா மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பகுதி மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் தேவகைளையும் பிரச்சினைகளையும் அறிந்து கொள்வதும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ,மக்களுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துவதுமே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் கருணா அணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்னா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுபபினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது. (தி-121)

# வலைகளைத் தொலைத்தவர்களைத் தொடர்புகொள்ளக் கோரிக்கை

(பருத்தித்துறை)

கடந்த வருடம் வடமாரட்சி கடற் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை ,மீன் பிடி வலைகளைத் தொலைத் மீனவர்கள் தமது வலை உபகரணங்களுக்குரிய தடையங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு கடறறொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களைக கேட்டுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் தொடர்பு கொளளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் கடலில் மீட்கப்பட்ட ஒரு தொகுதி வலைகள் மற்றும மீன்பிடி உபகரணங்கள் என்பன கடலில் மீட்கப்பட்டு ,வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பாதுகாப்பில் வைக கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (தி-52)

# காவிரி நடுவர் மன்றம் அமைய தி.மு.க. தான் காரணம்

## கருணாநிதி



(தஞ்சாவூர்)

காவிரி பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க காரணமாக இருந்தது தி.மு.க. தான் என அக்கட்சியின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தஞ்சைத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் எஸ்.எஸ்.பழனிமாணிக கத்தை ஆதரித்து கடந்த வியாழக்கிழமை இரவு தஞ்சாவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசினார்.

எதிர்க்கூட்டணியினர் காவிரிப் பிரச்சினையில் என்மீது குறம்சாட்டிப் பேசுகின்றனர். கர்நாடக அமைச்சர்களுடன் பல முறை பேசியிருக்கிறேன். அப்போதைய கர்நாடக மாநில முதல்வர்கள் வீரேந்திர பாட்டில், பட் டேல், கேரள முதல்வர்கள் இ.எம்.எஸ்.நம்பு,திரிபாட், அச்சுதமேனன், மத்திய அமைச்சர்கள்கே.எல்.ராவ்ட், ஜெகஜீவன்ராம், பிரதமர் இந்திரா காந்தியென அனைவருடனும் பலமுறை பேசியிருக்கிறேன். காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென 1970ஆம் ஆண்டு வலியுறுத்தினோம் என்றார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது, மத்திய அரசு மௌனம் சாதித்ததால் 8.7.1971 இல் காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம். அதற்குப் பிறகும் அமைக்கப்படாததால் 1989ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி வி.பி.சிங் ஆட்சிக் காலத்தில் நடுவர் மன்றத் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இடைக்காலத் தீர்ப்பு பெறப்பட்டது. அதை அமுலாக்க பிரதமர் தலைமையில் காவிரி ஆணையம் அமைக்கப்பட்ட போது தஞ்சையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஜி.ஆர். மூப்பனார், ஆர்.நல்லக் கண்ணு, காவிரி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் ரெங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். நாங்கள் ஆட்சியில் இருந்த போது ஆணையம் முடிவெடுத்து தேவையான நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இதுபோன்று தஞ்சை விவசாயிகள் எலிக்கறி சாப்பிட்டார்களா? பட்டினிகிடந்து உயிரை விட்டார்களா? அண்டை மாநிலங்களுடன் உறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டாமா?

உடல் நலமின்றி மருத்துவமனையில் இருந்த மர்றனைப் பார்க்க பிரதமர் வாஜ்பாய் வந்த போது கூட தஞ்சை விவசாயிகள் பட்டினிக்கிடக்கிறார்கள் காவிரி ஆணையத்தை கூட்டுங்கள் எனக் கேட்டுக்கொண்டேன். அந்த அம்மா வரமாட்டாரே எனப் பிரதமர் கூறினார். அப்போது தஞ்சாவூர் விவசாயிகளின் குரலை எதிரொளிக்க வேண்டிய முதலவர் ஜெயலலிதா, பிரதமரைச் சந்திககாமல் உதகை சென்று விட்டார். அங்கிருந்து மைசூர் சென்ற அவர் கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவைச் சந்தித்து தண்ணீர் கேட்கப் போகிறாரோ என நினைத்தேன். ஆனால், கிருஷ்ணாவைச் சந்திக்காமல் சாமுண்டீஸ்வரி கோயிலுக்குச் சென்று வந்தார்.

காவிரிப் பிரச்சினையில் வாஜ்பாய துரோகம் செய்து விட்டார் எனப் பேசியவர் ஜெயலலிதா. பா.ஜ.கவும், காங்கிரஸும் ஓட்டுக் கேட்டு வந்தால் தமிழக மக்கள் குறிப்பாக காவிரி டெல்டா பகுதி மக்கள் அவர்களை விரட்டி அடிப்பார்கள் எனக் கடந்த நவம்பர் மாதம் சட்டப்பேரவையில் பேசியவர்தான் ஜெயலலிதா, அவர் தான் இன்று பா.ஜ.கவுடன் கூட்டு சேர்ந்திருக்கிறார்.

அந்த பா.ஜ.க.வின் கர்நாடக மாநிலத் தலைவர் அனநதகுமார் கர்நாடகத்திற்கே தண்ணீர் இல்லாதபோது தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடுகிறார் எஸ்.எம்.கிருஷ்ணா எனக் குற்றம் சாட்டி பேசியிருக்கிறார். எனவே தேர்தல் காலத்தில் ஜெயலலிதா எதையும் சொல்வார்.

தி.மு.க. இடம்பெற்றிருந்த தேசிய ஜனநாயக் கூட்டணியின் செயல்திட்டத்தை நடை முறைப படுத்த வழிதிறக்கவில்லை. அச் செயல்திட்டத்தில் குறிப்பாக சட்டப்பேரவைகளிலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சத இட ஒதுக்கீடு வழங்குவோம் என்றிருந்தது. இக் கொள்கை 1929ஆம் ஆண்டில் தந்தை பெரியார் செங்கல்பட்டில் நடத்திய சுயமரியாதை மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகும். ஆனால், இதற்கான அரசியல் சட்ட திருத்தமசோதாவை நிறைவேற்ற பா.ஜ.க.முன்வரவில்லை. சில கட்சி ஆதரவு அளிக்கவில்லை எனக்கூறிவந்தனர். ஆனால் காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி ஆகியவை எதிர்த்த பொடா சட்டத்தை நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தைக் கூட்டி அவசர அவசரமாக நிறைவேற்றினார். எண்ணம் இருந்திருந்தால் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை அவர்கள் நிறைவேற்றியிருக்க முடியும். நல்ல காரியம் செய்ய எந்த சட்டம் கொண்டுவந்தது தேசிய ஜனநாய்கக் கூட்டணி. அப்போது தான் முதல் கட்ட கசப்பு அந்த அணிமீது எங்களுக்கு ஏற்பட்டது.

(து)

# 356-ஐ பயன்படுத்தும் நேரம் வந்துவிட்டது

## கருணாநிதி

தமிழ்நாட்டில் மக்கள் விரோத, ஜனநாயக விரோத ஆட்சியை மேற்கொண்டுவரும்அ.இ.அ.தி.மு.க அரசை பதவிநீக்கம் செய்வதற்கு 356ஆவது பிரிவை பயன்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டது என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறுகிறார்.

தமிழ் நாட்டில் அரச ஊழியர்கள் சங்கங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. குறித்து சென்னையில் செய்தியாளாகளுக்கு பேட்டியளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார். எனினும், தமிழக அரசை 356 வது பிரிவை பயன்படுத்தி கலைக்குமாறு மத்திய அரசை தி.மு.க வலியுறுத்தாது என்றும் தி.முக.வைப் பொறுத்தவரை மக்கள் விரோத அ.இ.அ.தி.மு.க அரசுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி போராட்டத்தில் ஈடுபடும் எனறும் கருணாநிதி கூறினார்.

அரச ஊழியர்கள் சங்கங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று கூறிய கருணாநிதி, அரச ஊழியர்களுக்கும், அரசுக்கும் இடையே குறைகளை எடுத் துக்கூறும் பாலமாக ஊழியர் சங்கங்கள் செயல்பட்டு வந்தன என்றும், தற்போது அந்தப் பாலம் அகற்றப்பட்டுள்ளது என்றும் பதிலளித்தார்.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களின் நல னைக் கருதி வழங்கப்பட்ட பல வேறு சலுகைகளையும் அரச ஊழியர்கள் தற்போது இழந்து விட்டனர் என்று கூறிய கருணா நிதி அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதன் மூலம் அரச ஊழியர்கள் பிரச்சினை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது என்றார்.

ஊழியர் சங்கங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டிருப்பதற்கு அரசு தரப்பில் கூறப்படும் காரணம் சரியானதல்ல என்றும், சில குறிப்பிட்ட ஊழியர்கள் மட்டுமே தவறான செயல்களில் ஈடுபட்டதாகவும், அதற்காக அனைத்து ஊழியர்களையும் தண்டிக்கக்கூடாது என்றும் கருணாநிதி கூறினார்.

தமிழ் நாட்டில் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஊழியர் சங்கங்களுக்கு அங்கீகாரம் மீண்டும் அளிக்கப்படுமா என்று கேட்ட போது, தற்போதைய அரசு எடுத்துவரும் மக்கள் விரோத நடவடிக்கைகள், அநீதியான அனைத்து செயல்களும் திரும்பப் பெறப்படும். அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரிதான் என்று பதிலளித்தார்.

(து)



சென்னையில் முக்கிய நகர வீதியில் உள்ள சுவர் ஒன்றில் வரையப்பட்டிருக்கும் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முதலமைச்சருமான ஜெயுலலிதாவின் வரைபடத்தை உற்று நோக்கும் சிறுவன்.

# காங்கிரஸ் செல்வாக்கு தேய்கிறது

## என்கிறார் அத்வானி

(புதுடில்லி)

ஷெட்யூல் இனமக்கள் மற்றும் பின்தங்கிய பரிவினரிடம் காங்கிரஸ் கட்சிக்கு 40ஆண்டுகளுக்கு முன்பிருந்த செல்வாக்கு தற்போது பா.ஜ.கட்சிக்கு ஏற்பட்டிருப்பதாக அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் முக்தார் அபாஸ் நல்லி கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் வெள்ளிக் கிழமை செயத்தியாளர்களிடம் பேசிய அவர், பா.ஜ.கட்சியின் கொளகைகள்,திட்டங்கள் காரணமாக இப் பிரிவினரை பா.ஜ.க. ஈர்த்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு வேறு எந்த அரசும் செய்யாத அளவுக்கு இப் பிரிவினரை சமூக, பொருளாதார மேம்பாட்டு நீரோட்டத்துக்கு கொண்டு வந்ததுதான் காரணம் என்றும் நல்லி குறிப்பிட்டார்.

ஸ்ரீநகரில் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் மீது கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற தீவிரவாதிகளின் தாக்குதல் தேர்தல் அமைதியாக நடைபெறுவதைச் சீகுலைக்கும் முயற்சி என்று அவர் கூறினார்.

இத்தகைய தாக்குதல்கள் வெற்றிபெற அனுமதிக்கப்பட்ட மாட்டாது என்றும் தேர்தலைப் பாதிக்காது என்றும் அவர் சொன்னார்.

(து)

## இந்தியச் செய்திகள்

### வாஜ்பாயின் தமிழ் நாட்டுவிஜயம்

தமிழ் நாட்டில் தேர்தல் பிராசாரம் செய்வதற்காகப் பிரதமர் வாஜ்பாய் அடுத்துமாதம் 5ஆம் திகதி சென்னை வருகிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக பாரதிய ஜனதா பொதுச் செயலாளர் குமாரவேலு, தீவுத்திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பிரதமரும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் கூட்டாகப் பங்கேற்கவிருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் பாரதிய ஜனதா, அ.இ.அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு பிரசார மாக இல்லையென கருத்துக்,கணிப்புகள் கூறுவதை மறுத்த குமாரவேலு, அனைத்துத் தொகுதிகளிலும் தங்கள் கூட்டணி வெற்றி பெறுமென நம்பிக்கை தெரிவித்தார்.

(து)



புதுடில்லியில் நடைபெற்ற கல்வி விழா ஒன்றில் கலந்து கொள்ள வந்திருந்த கல்வித்துறை செயலர் குமுட் பன்சாலை வரைவேற்கும் சிறுமிகள்.

# கர்நாடக முதலமைச்சர் மீது வெங்கைய நாயுடு தாக்குதல்

கர்நாடக மாநில விவசாயிகளை கர்நாடக முதல்மைச்சர் பாது காககத தவறிவிட்டதாக பா. ஜ.க தலைவர் வெங்கைய நாயுடு குறை கூறியிருக்கிறார்.

பெல்ஹாமில் அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பா.ஜ.க கர்நாடக மாநிலத்தில் ஆட்சிக்கு வந்தால் சாலைகள், குடிநீர்,மின்சாரம் மற்றும் விவசாயததுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் என்று கூறினார்.

மாநிலத்தில் எந்த ஒரு பகுதியும் புறக்கணிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசுக்கு எதிராக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரசாரத்தை மேற் கொண்டிருப்பதாகவும் வெங்கையநாயுடு தெரிவித்துள்ளார்.

மக்கள் புத்திசாலிகள் என்றும், அரசின் செயற்பாடுகளைவைத்து அவர்கள் வாக்களிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (து)

# அஜாக்கிரதையால் ரயில் விபத்து அரசின் அதிகாரபூர்வ அறிக்கை

(சியோல்)

வட கொரியாவில் வியாழக் கிழமை நடந்த கோர ரயில் விபத் திற்கு அஜாக்கிரதையே கார ணம் என அந்நாடு தெரிவிதது ளளது.



விபத்துக்குறித்து முதல் முறை யாக வடகொரியா சனிக்கிழமை அறிக்கை வெளியிட்டுள்ளது.

சீன எல்லைக்கு அருகே 20 கி.மீ தொலைவில் உள்ள வட கொரிய ரயில் நிலையத்தில் இந்த விபத்து நடந்தது. வெடிப் பொருள களையும் இராணுவ டாங்கிகளை யும் சுமந்து சென்ற ரயில் தடம மாறும் போது மின் கோளாறு காரணமாக தீப்பற்றிக் கொண்டது. ரயிலில் இருந்த வெடிபொருள் கள் வெடித்துச் சிதறியதால் அதிக பாதிப்பு ஏறபட்டது. அஜாக் கிரதையினால தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று அரச அறிக்கை கூறுகிறது.

விபத்தில் நூற்றுக் காணக்கனோா கொல்லப் பட்ட னர். ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் படுகாயம் அடை ந்தனர் .விபத்து நடந்த பகுதி யருகே இருந்த குடியிருப்புக் கள் முற்றிலும் சேதமடைந் தன. இறந்தவர்களில 76 மாண வர்களும் அடங்குவர்.


விபத்துக்குறித்து விசாரணை க்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஐ.நா அதிகாரிகளும் பல்வேறு சேவை அமைப்புகளும் சம்பவ இடத்தைப் பார்வையிட விரைந துள்ளன. விபத்து நடந்த பகுதி யில் சகஜ நிலையை மீண்டும் கொண்டுவர வடகொரிய அரசாங கம் போர்க் கால அடிப்படை யில் மீட்புப்பணிகளை முடுக்கி விட்டுள்ளது. பல்வேறு நாடுக ளும் சாவதேச அமைப்புகளும் மனிதாபிமான முறையில் உதவ முன் வந்துள்ளதற்கு வட கொரிய அரசு தனது நன்றியைத் தெரிவித் துக் கொண்டுள்ளது.



ஆயினும் வானில் இருந்து வந்த எரிகல் ஒன்று தாக்கிய தால் இவ் விபத்து நிகழ்ந்ததாக வும செய்திகள் தெரிவக்கின்றன. விபத்து நடந்த இடததிற்கு சர்வ தேச அமைப்புகள் செல்வதற்கு முன்னபே இறந்தவர்களின் உடல்கள் அனைத்தும் அகற்றப் பட்டு விட்டதாகவும் அறிவிக்கப் படுகின்றது.

விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 4கி.லோ மீற்றர் சுற்றள விற்கு வீடுகளின் யன்னல்களும் கூரைகளும் தகர்க்கப்பட்ட நிலை யில காணப்படுகின்றன.

(யே)



உலகின் மிக வேகமாகச் செல்லும் குயின் மேரி 2 என்ற இந்தப் பயணிகள் கப்பல், லண்டன் துறைமுகத்தில் இருந்து நியு,யோர்க்கை நோக்கிப் பயணிக்கும் காட்சி.

# ஈராக்கில் குண்டு வெடிப்பு 14 பேர் மரணம் 36பேர் காயம்

(பக்தாத்)

ஈராக்கில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் வசிக்கும் சதர் நகரில் நடைபெற்ற வெவ்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங் களில் 14பேர் இறந்தனர். 36பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவங்களில் காயமடைந் தோர் அனைவரும் சதர் பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.கோழிககறிச் சந்தை, அஷ்ஹுடபிபா மற்றும் அல் பவதேர் பகுதிகளில் இக் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந் தன.

கோழிக்கறிச் சந்தையில் நடந்த சம்பவத்தில் அமெரி க்கப் படையின் பங்கு ஏதும் இல்லை என அமெரிக்க இரா ணுவ அதிகாரி ஒருவர் உறுதி செய்தார்.இச் சம்பவம் குறி த்து புலனாய்வு செய்து வருவ தாகவும் அவர் கூறினார். அல் ஹபீபாவில் நடந்த குண்டு வெடிப்பில் 35 வயது பெண் ஒருவர் கொல்லப பட்டார். இதில் ஐந்து வயது சிறுமியும் பலத்த காய மடைந்தார்.(யே)

# தேர்தலில் வாக்களிக்க ஹமீட் கராஸி அழைப்பு

(காபுல்)

எதிர்வரும் செபடெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் மக்கள் முழுமையாக வாக்களி க்க வேண்டும் என்று அந் நாட்டு ஜனாதிபதி ஹமீட் கராஸி அறை கூவல் விடுத்தார்.

ஆப்கானிஸ்தானின் சர்ச்சைக் குரிய பிரதேசமும் தலிபான் களின் கோட்டை என்றும் கருதப் படும் கந்தகாரில் அவர் பொது மக்களுக்கு உரையாற்றினார்.

இரண்டுவருடங்களுக்கு முன்பு தலிபான் உறுப்பினர் என்று சந் தேகிக்கப்படும் ஒருவரின துப் பாக்கி வேட்டிலிருந்து அவர் மயிரிழையில் தப்பியதும் கந்த காரில்தான்

தற்போதைய கந்தகார் ஆளு நரை ஆதரித்தே அவர் இங்கு உரையாற்றினார். ஓப்பியம் எனப்படும் போதைவஸ்து இங்கு தான் உலகில் அதிகமாக உற் பத்தி செய்யப்படுகிறது. இது ஆப்கானிஸ்தானை பெரிதும் பாதிப்பதாகவும், 25வருடமாக



போரினால் அழிவுறும் ஆப் கானை கட்டியெழுப்ப அனை வரும் முன்னவர வேண்டும் என் றும் அவர் கோரிக்கை விடுத் தார். (யே)

# பிரேசில் சிறையில் கலவரம் 14 பேர் மரணமடைந்தனர்

(றியோடிஜெனீரோ)

சுமார்360 பேருக்காக வடிவமைக்கப்பட்ட சிறைச்சாலையில் 1000பேர் அடைக்கப்படுவதை எதிர்த்துச் சிறையில் நடந்த களேபரங்களில் சுமார்14 பேர் கொல்லப்பட்டனர்.

பிரேசிலின் றொன்டோனியா மாநிலத் தில் இடம்பெறற இச் சம்பவத்தில் கைதி களைப பார்க்க வந்த உறவினர்களைச் சிறைக் கைதிகள் பணயமாகப் பிடித்து வைத்தனர். சுமார் 5 நாட்கள் உணவில் லாமலும் நீர் மற்றும் மின்சாரமில்லாமலும் விடப்பட்ட நிலையில் சிறைக் கைதிகள் பணயமாக வைத்திருந்தவர்களை விடுவித் தனர்.




முன்னதாகக் கைதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்சனையில் சிலரின் தலைகளையும் உடல அங்கங்களையும் துண்டித்துக கூரையிலி ருந்து அவர்கள் வீசி எறிந்தனர்.

நிலைமை இப்பொழுது கட்டுப் பாட்டுக் குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக பிரேசில் அறிவித்துள்ளது. ஆயினும் அரசின் சிறைச் சாலை நடைமுறைகள் குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

(யே)


# இந்தோனேசியாவில் 37 பேர் மரணம்

(ஜகார்த்தா)

சுமாத்திரா மாகாணத்தில் பஸாமன் நகரிலிருந்து மேடன் நகருக்குப் பயணிகளை ஏற்றிச சென்று கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று மண் சரிவில் அகப பட்டது.

இவ் விபத்தில் 37 பேர் கொல் லப்பட்டதுடன் 13 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.மேலும பலர் பஸ்ஸிற்குள் அகப்பட்டி ருப்பதாகவும் அவர்களின் உடல் களைத் தேடும் பணி இடம் பெற்றுவருவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர்.


(யே)




# சார்ஸ் நோய் தொடர்பில் சீனா மீள் நடவடிக்கை

(சங்காய்)

இந்த ஆண்டின்முதலாவது சார்ஸ் நோயாளி கடந்த திங்கட்கிழமை சீனாவில் மரணமான தைத் தொடர்ந்து, இந்நோயைக கட்டுப்படுத்தும் அதிதீவிர மீள் . நட வடிக்கையில் சீனா இறங்கியுளளது.



சீனாவின் பிரதான நிலப்பரப்பில் கடந்த ஆண்டு 349 பேர் இந்நோயால் மரணமாயினர். உலகெங்கும் சுமார் 8 ஆயிரம் பேருக்கு இந்நோய் தொற றியது. இதில்770 பேர் மரணமாயினர்.

கடைசியாகக் கடந்த வருடம் யூலை மாதத்திலேதான் கடைசிச் சார்ஸ் நோயாளி சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டார். அத்தோடு இந்நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது.

தற்போது மரணமானவர் சீனாவின் தொற்று நோய் தடுப்பு பிரிவில் பணி யாற்றும் ஒரு யுவதியின் தாய் என்றும் இந்த யுவதி மூலமாகவே இந் நோய் தாய்க்குப் பரவியதாகவும் அறிவிக் கப்படுகிறது. மேற்படியுவதிக்கும் இந் நோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் குணமடைந்தார். (யே)



அவுஸ்திரேலியாவின் சிட்னியில் தற்போது பனிப் பொழிவு காணப்படுகிறது. இதனால் விமானப் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சிட்னி ஒப்பேரா ஹவுஸ் மற்றும் ஹாபர்பிரிட்ஜை அதிகாலைப்பனி மூட்டம் மூடியுள்ள காட்சி.

# உக்ரெய்ன் விற்றாலி கிளிற்ஸ்கோ உலக குத்துச்சண்டை நாயகன்



உலகின் புதிய அதிபாரக் குத்துச்சண்டை சம்பியனாக உக்ரெய்ன் நாட்டைச் சேர்ந்த 38வயதான விற்றாலி கிளிற்ஸ்கோ வெற்றிவாகை சூடினார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் 32வயதான தென்னாபிரிக்க வீரர் கொரி சாண்டர்ச்சைப் பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் முந்நிலையில் போட்டியின் சில தொழில் நுட்ப விதிமுறைகள் அடிப்படையில் வென்றார்.

முந்நாள் சம்பியன் லெனெக்ஸ் லூயிசுக்குப்பின்னர் அதிக காலம் நிரப்பப்படாதிருந்த இந்தப்' " '_த்தை 8வது சுற்றுமுடிவதற்கு 14வினாடிகள் இருந்த நிலையில் 2நிமிடங்கள் 46விநாடிகளில் வென்றெடுத்தார்.


இதற்கு முன்னர் எந்த ஒரு போட்டிகளிலுமே இரண்டு சுற்றுக்களைத் தாண்டாத தென்னாபிரிக்க வீரர் சாண்டர்ஸ் மிக ஆக்ரோஷமாக ஆரம்பச் சுற்றுக்களில் மோதி எட்டாவது சுற்றுவரை வந்தார். கிளிற்ஸ்கோவின் சகோதரர் விளாடிமீரை 13மாதங்களக்கு முன் ஒரு குத்தில் இவர் வீழ்த்தினார்.

இரத்தம் முகத்தால் வடிந்துகொண்டிருந்த நிலையிலும் எட்டாவது சுற்றில் கிளிற்ஸ்கோ விட்ட அதிரடிக்குத்தில் சாண்டர்ஸ் நிலைகுலைந்தார்.

(யே)

# ஹூஸ்டன் ஜயன்ற்ஸ் அணி லா லேக்கர்சை வென்றது

தற்பொழுது அமெரிக்காவில் நடைபெற்றுவரும் தேசிய கூடைப் பந்தாட்டத்தில் "ஹூஸ்டன் ஜயன்ற்ஸ்"அணியும் "லா லேக்கர்ஸ்" அணியும் நேற்று மோதின



மஜிக் ஜோன்சன், மைக்கல் ஜோர்டன் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற கூடைப்பந்தாட்ட வீரர்களுக்குப் பிறகு இத்துறையில், நட்சத்திர அந்தஸ்துள்ளவராகக் கருதப்படும் ஓ நீல், லேக்கர்ஸ் அணி சார்பாக களமிறங்கினார்.

ஆட்டம் முடிவடைதற்கு 7நிமிடங்கள் மீதமாக இருந்தபோது இரு அணியும் 86புள்ளிகளோடு சமநிலையில் இருந்தன.

ஆனால் இறுதி 7நிமிடங்களில் ஹூஸ்டன் அணியினர் சரமாரியாகக் கூடைக்குள் பந்தைப் போட்டபடி இருந்தனர். களைப்படைந்த ஓ நீல் செய்வதற்றியாது திகைததுப் போனார். இறுதியில் ஹூஸ்டன் அணியினர் 102-91என்ற புள்ளிகள் அப்படையில் வெற்றிபெற்றனர். (யே)

# இலங்கை உலக சாதனை சிம்பாப்வே 35க்கு அவுட்

## சமிந்த வாஸ் 300விக்கெற்

மிகக்குறைந்த ஓட்டங்களுககு ஒரு அணியை ஆட்டமிழக்காவைத்த சாதனையை இலங்கை அணியினர் நிகழ்த்தினர்.

நேற்று இலங்கைக்கும் சிம்பாப்வேக்குமிடையிலான 3வது சர்வதேச ஒருநாள் போட்டியின்போதே இச் சாதனை நிகழ்த்தப்பட்டது. 35ஓட்டங்களுக்கு சிம்பாப்வே சகல விக்கெற்றையும் இழந்தது. 1விக்கெற் இழபபுடன் இலங்கை வெற்றி இலக்கை அடைந்தது.

இலங்கை அணியின் வீரர் சமிந்தவாஸ் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது 300வது விக்கெற்றைக் கைப்பற்றினார். 5போட்டிகள் கொண்ட இத் தொடரில் மூன்றை வென்று இலங்கை தொடரை வென்றுள்ளது.

அணியின் முக்கியமான 15வீரர்கள் முரண்பாடுகள் காரணமாக வெளியேறியதால் சிம்பாப்வே கிரிக்கெற் மிகப்பலவீனமான நிலையிலுள்ளது. (யே)

# மஞ்செஸ்டர் யுனைட்டட்டை லிவர்பூல் தோற்கடித்தது

அறுபத்தேழாயிரத்து 747பார்வையாளர்கள் மத்தியில் யூபாக்கிண்ண அரையிறுதிப் போட்டிகளின் முதல் சுற்றில் மஞ்செஸ்டர் யுனைட்டட் கழகமும் லிவர்பூல் கழகமும் சனிக்கிழமை மோதின.



பிரிட்டனின் மிகப்பிரபலமான இவ்விரு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இப் போட்டிக்குக் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

உலகப் புகழ்மிக்க ரீல்லி நடுவராகாப் பணியாற்றினார். ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக இருந்த இப் போட்டியில் யுனைட்டட் அணியினர் முதலில் கோலபோடும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டனர்.

போட்டியின் 63வது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் டனி மோ.'.பி மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டுத் தனது அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

லிவர்பூல் அணிக்காக மூன்றாவது தடவையாக டனி மோர்.'.பி தீர்மானிக்கும கோல் ஒன்றைப் போட்டமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் இவ்வணி தோற்றிருக்குமானால் இறுதிப் போட்டிக்குள் நுழையும் அதன் சந்தர்ப் பங்கள் முற்றாகவே இழக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (யே)

# விளையாட்டுச் செய்திகள்

# நியூசிலாந்து அணி இங்கிலாந்து பயணம்

மூன்று டெஸ்ட் தொடர்களிலும் 3ஒருநாள் போட்டிகளிலும விளையாடுவதற்காக நியூசிலாந்து அணியினர் நாளை செவ்வாய்க்கிழமை இங்கிலாந்துக்குப் பயணமாகின்றனர்.



காயம் காரணமாகச் சில காலம் அணியிலிருந்து விலிகியிருந்த ஷேன பொண்ட், நாதன் அஸ்ரில் மற்றும் ர.'. பி ஆகியோருக்கான உடற்தகுதி காண பரீட்சை சனிக்கிழமை நடைபெற்றது.

முதலாவது டெஸ்ட் போட்டி மே மாதம் 20ம்திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெறும் என்றும், மே 3ஆம் திகதி பயிற்சிப் போட்டியொன்று இடம்பெறவுள்ளதாகவும் அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன் பிறேஸ்வெல் அறிவித்துள்ளார்.

அணியில் டானியல் விற்றோரி மட்டுமே சுழற்பந்து வீச்சாளராகச் சேர்க்கப்பட்டுள்ளார். 1999ல்,2-1 என்ற ரீதியில் நியூசிலாந்து டெஸ்ட் தொடரை இழந்து உலகின மோசமான டெஸ்ட் அணியாக அப்போது விளங்கியது குறிப்பிடத்தக்கது.

(யே)

# மரடோனா மீண்டும் அவசர சிகிச்சைப்பிரிவில்

கடந்த ஞாயிறு திடீர் மூச்சடைப்பு, மற்றும் இரத்த அழுத்தம் காரணமாக புவனஸ் அயர்ஸிலுள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட உதைபந்தாட்ட நட்சத்திரமும் முந்நாள ஆர்ஜென்டீன அணித் தலைவருமான டியாகோ மரடோனா நேற்று மீண்டும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.



அவரது உடல்நிலை தேறிவருவதாக வைத்தியர்கள் அறிவித்த போதும் நேற்று மீண்டும் திடீரென அவர் சுவாசிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கினார். இதனைத் தொடர்ந்து அவருக்குச் செயற்கை முறையில் சுவாசிப்பு உபகரணங்கள் பொருத்தி சுவாசத்திற்கு உதவி வழங்கப்பட்டது.

வைத்திய சாலையில் ஒரு வாரமாக இருக்கும் மரடோனாவின் நிலையை அறிவதற்காக ஆயிரக்கணக்கான அவரது விசிறிகள் வைத்தியசாலை வளாகத்தில் தங்கியிருந்து செபவழிபாடுகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (யே)

# மைக்கல் சூ மாக்கரை வீழ்த்திய ஜோசன்பற்றன்



உலகின் போர்மியூலா நம்பர் வண் சாரதி என்ற பெயருக்குரிய ஜேர்மனியின் மைக்கல் சூமாக்கரை ஆங்கிலச் சாரதியான ஜோசன் பற்றன் வீழ்த்தினார்.

தற்பொழுது நடைபெற்றுவரும் சான் மரியானோ கிராண்ட பிறிக்ஸ் போர்மியூலா வண் கார் ஓட்டப்பந்தயத்தின் முதலாவது சுறறில் பெரா! அணியின் மைக்கல் சூமாக்கரைப் பின்தள்ளிய இந்த சீசனின் முதல் சாரதி என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

முந்நாள் உலகச் சம்பியன அயற்றன் சென்னா 1992ஆம் ஆண்டு கனேடிய கிரா்ண்ட் பிறிக்ஸ் போட்டியில் பாதையைவிட்டு விலகி அவரது கார் விபத்திற்குள்ளான போது மரணமானர். அவரது சிரார்த்த தினத்தில் "நான் அடைந்திருக்கும் இவ் வெற்றி மகத்தானது" என்று ஜோசன் சொன்னார். (யே)

# குற்றச்சாட்டை மறுக்கும் தாரகை மேரியன் ஜோனஸ்

விளையாட்டு வீரர்களின் வேகததை அதிகரிக்கும் போதைப் பொருளை விநியோகித்த விக்டர் கொன்டேக்கு 7350டொலர் பெறுமதியான காசோலை ஒன்றை வழங்கினார் என்ற குற்றச்சாட்டை மேரியன் ஜோன்ஸ் மறுத்தார்.



இந்தப் பெயருடைய ஒரு நபரை நான் பார்தததோ, பேசியதோ அல்லது பணப் பரிமாற்ற நடவடிக்கையில் சந்தித்ததோ கிடையாது. அமெரிக்க நீதிமுறை இதனை நிச்சயம் உறுதிப்படுத்தும் என்றார்.

கொன்டேயுடன் தொடர்புடைய நான்கு ஆண் மெய்வல்லுநர்கள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அமெரிக்க மெய்வல்லுநர் வட்டாரததில் இது பெரும் பிரச்சனையைக் கிளபபியுள்ளது.

மூன்று தடவைகள் ஒலிம்பிக்கில் குறுந்தூர ஓட்டங்கள மற்றும் நீளம்பாய்தலில் தங்கம் வென்ற ஜோன்ஸ் ஓகஸ்ட் எதென்ஸ் ஒலிம்பிக்கிற்காகக் காத்திருக்கிறார். (யே)

# சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு நோர்வேயின் மத்தியஸ்தம் அவசியம்

## முன் அனுபவம் உண்டு என்கிறார் ஜெகான் பெரேரா

(கொழும்பு)

அரசாங்கம் தாமதமின்றி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதே சிறந்ததென தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர் ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திற்குள் சமாதானப பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவது வரவேற்கத்தக்கது. இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங் கம் நடத்தும்போது அங்கு நோர்வே மத்தியஸ்தம் வகிப்பதே சிறந்தது.

எனவே, நோர்வேயின் அனுசரணையை இலங்கை அரசு தற்போது நாடியிருப்பதும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்றார்.

நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கான அமைப்பைச் சேர்ந்த குமார் ரூபசிங்க அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்த போது,

அரசியல் போட்டிக்குமேலாக சமாதான முயற்சிகளில் அரசாங்கம் கவனம் செலுத்துவது அனைத்து மக்களினதும் பாதுகாப்பையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்த உதவும். நாடு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இழுத்தடிப்புச் செய்வது அனைவருக்குமே கவலைக்குரிய விடயம். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதே தற்போதைய நிலைக்குப் பரிகாரம் ஆகும்.

இது குறித்து மாற்றுக் கொள்கை நிலையத்தைச் சேர்ந்த பாகியசோதி சரவணமுத்து கருத்துத் தெரிவிக்கையில், முதன் முதலில் 2000 ஆம் ஆண்டில் நோர்வேயைச் சமாதான ஏற்பாட்டாளராக கலந்து கொள்ளுமாறு கூறிய ஜனாதிபதி சந்திரிகாவே சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள தீர்க்கமான முடிவு வரவேற்கத்தக்கது.

சமாதானம் தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் குறித்துச் சில கட்சிகள் தெரிவித்து வந்த சந்தேகம் தொடர்பான கருத்துக்கு ஜனாதிபதியின் தீர்மானம் ஒரு முடிவுகட்டுவதாக அமைந்துள்ளது.

முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவும், தற்போதைய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்து வரவேற்புத் தெரிவித்துள்ளார் என்றார்.

(தி-121,10)

## புதிய ஆணையாளர் நியமனம்

(பருத்தித்துறை)

யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் பீ.பாலசுப்பிரமணியம் வடக்கு, கிழக்கு மாகாணசபையால் பதவி உயர்த்தப்பட்டு திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுளளார்.

திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பணியாற்றிய எஸ்.பாலசுப்பிரமணியம் அரச சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

(உ-52)

# இலக்கிய உலகிற்கு புதிய இரத்தம் பாய்ச்சியவர்

## புலோலியூர் தம்பையா என்றால் மிகையாகா

### செங்கை ஆழியான் தெரிவிப்பு

(பருத்தித்துறை)



"ஈழத்து சிறுகதை இலக்கியத்தில் புலோலியூர் தம்பையாவின் பங்களிப்பு மிகச் சுதந்திரமானது. இவரது ஐம்பதிலும் ஆசைவரும்" சிறுகதைகள் தொகுப்பு சமூகத்திற்குத் தேவையான நல்ல பல அம்சங்களைக் கொண்டுள்ளது. இவர் புதியதொரு அணியை ஏற்படுத்தி இலக்கியத்தின் மூலம் புதிய இரத்தத்தை உலகிற்குப் பாய்ச்சியுள்ளார். இது மிகைப்படுத்தப்பட்ட கருத்தல்ல.

மேற்கண்டவாறு, புலோலியூர் தம்பையாவின் "ஐம்பதிலும் ஆசைவரும்" சிறுகதைத் தொகுதி நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்திய பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் குறிப்பிட்டார்.

பேராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் நல்லை ஆதினத்தில் நடைபெற்ற இவ் விழாவிலே நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசசாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய செங்கை ஆழியான்,

சிறுகதை இலக்கியம் 1895 ஆம் ஆண்டு முதன் முதலாக ஈழத்தில் உதயதாரகை மூலமாக முகிழ்த்தது. 1915ஆம் ஆண்டில்தான் இந்தியாவில் சிறுகதை இலக்கியம் வெளிவந்தது.

புலோலியூர், தமிழிலக்கியத்துறைக்கு சிறந்த படைப்பாளிகளைத் தந்துள்ளது. வரதர், முருகானந்தன், நடராஜா சர்மா ஆகிய எழுத்தாளர்கள் 1947ஆம் ஆண்டு காலப் பகுதியில் இணைந்து மறுமலர்ச்சி சஞ்சிகையை வெளியிட்டு வந்தனர்.

அதில் 6 சிறுகதைகளை புலோலியூர் கு.பெரியதம்பி எழுதிப் பெயர் பெற்றார். இது ஈழத்துச் சிறுகதைக்குப் பெரும சிறப்பைச் சேர்த்துள்ளது.

க.சதாசிவம், கே.கந்தசாமி, ஆ.இரத்தினவேலோன், என்.கே. ரகுநாதன் ஆகியோர் இலக்கிய உலகில் பிரவேசித்து தரமான சிறப்பு மிக்க காத்திரமான சிறுகதை இலக்கியங்களைப் படைத்தார்கள். இவர்கள் அனைவரும் புலோலியூரையே சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரையும் புலோலியூரே இலக்கிய உலகிற்குத் தந்தது பெருமைக்குரியதாகும். புலோலியூர் தம்பையாவின் அழியாத கோலங்கள் சிறுகதைத் தொகுதி ஏற்கனவே வெளியிட்டு வைக்கப்பட்டது. "ஐம்பதிலும் ஆசை வரும்" சிறுகதைத் தொகுதி அவரது இரண்டாவது சிறுகதைத தொகுதியாகும்.

ஈழத்துச் சிறுகதை வெளியீடுகளை நோக்கும்போது ஐம்பதிலும் ஆசைவரும் சிறுகதைத் தொகுப்பு மிக வித்தியாசமான சிறுகதைகளை உள்ளடககியுள்ளது. தனித்துவத்தை கொண்ட இச் சிறுகதைகள் ஈழத்துச் சிறுகதைகளின் எல்லையை மீறிவிட்டது.

ஈழத்து இலக்கியத்தில் புதியதொரு பாணியை அறிமுகப் படுத்தியுள்ளார் எழுத்தாளர் தம்பையா. எழுத்தாளர் ஆ.இரத்தினவேலோன், தொழிலதிபர் லயன் சற்குணராசாவின் உதவியுடன் மீரா பதிப்பாக ஐம்பதிலும் ஆசைவரும் சிறுகதைத் தொகுபபு வெளிவந்துள்ளது. கொழும்பு மீரா பதிப்பகம் நல்ல நூல்களை வெளியிட்டு வருவது மகிழ்சசிக்குரியது என்றார். (உ-52)

# சபாநாயகர் தெரிவின் போது ஆளும் கட்சி இலஞ்சம் வழங்கியது

## எல்லாவல தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சபாநாயகர் தெரிவில் தாம் வெல்வதற்காக சில அரசாங்கத்தரப்பு அரசியல்வாதிகள் 10 மில்லியன் இலஞ்சம் வழங்கினார்கள் என ஹெல உறுமய பௌத்த குருமார் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த எல்லாவல மேதானந்த தேரர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களிடம் வாக்கு சேகரிக்கும் பணிகளில் அரசாங்கத் தரப்பினர் ஈடுபட்டுவந்ததை அன்றைய தினம் பாராளுமனறில் காணக்கூடியதாக இருந்தது. அப்போது தான் அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு கடிதத் துண்டில் 10 மில்லியன் தருவதாகவும், தம்பக்கம் சேர்ந்து விடுமாறும் கேட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் எம்.பிக்கு இலஞ்சம் வழங்கப் பட்டதை தான் கண்டேன்.

இதுபோலவே எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அணுகினார்கள். இம் முயற்சி பலிக்காத காரணத்தினாலேயே எம்மீது பைல்களையும், கடிதத்துண்டுகளையும் வீசினார்கள் என்றும் தேரர் மேலும் தெரிவித்தார்.

(தி-06)

# சமாதான நீதவானாக நியமனம்



காரைநகர் பாலகாட்டைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சற்குணராசா 05.03.2004 இல் சாவகச்சேரி மாவட்ட நீதவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

இவர் யாழப்பாணம் வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவரும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வலய மற்றும் பிராந்திய முன்னாள் தலைவருமாவார்.

இந்துசமயப் பேரவையின் ஆரம்பகால உறுப்பினரும், சைவ பரிபாலன சபையின் நிர்வாக உறுப்பினரும், புற்று நோய், எயிட்ஸ் தடுப்புச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும், கருங்காலி போசிட்டி முருகமூர்த்தி கோயில் திருப்பணிச் சபையின் நிர்வாகசபை உறுபபினருமான இவர் சீமாட்டி புடைவைக் கடையின் உரிமையாளருமாவார்.




கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' சிறுவர்களுக்கான திட்டத்தின் பரிசளிப்புவிழா நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள வங்கியின் கிளையில் இடம்பெற்றது.

இநநிகழ்வில் கலந்து கொண்டோரையும், முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள், கிளையின் முகாமையாளரிடம் பரிசில்கள் பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :பவன்)

# வங்கிகளுக்கிடையே நிலவும் போட்டியால் வங்கி நடைமுறைகளில் மாற்றம்

## கொமர்ஷல் வங்கி முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்கிகளிடையே நிலவிவரும் போட்டிச் சூழ்நிலை காரணமாக அனைத்து வங்கிகளும் தத்தமது



பாரம்பரிய நடைமுறைகளை விட்டு வலகிச் செயற்பட்டு வருகின்றன. இதற்கமைவாக கொமர்ஷல் வங்கியும் சமூக நலமேம்பாடுகளைக் கருத்தில் கொண்டு தனது நவீனத்துவம் நிறைந்த சேவைகளை தொடர்ந்தும் மக்களுக்கு வழங்கி வருகிறது என கொமர்ஷல் வங்கியின யாழ். கிளை முகாமையாளர் எஸ். ரவீநதிரா தெரிவித்துள்ளார்.

கொமர்ஷல் வங்கியின் "அருணலு" சிறுவர்களுக்கான கணக்குத் திட்டத்தின்கீழ் நடைபெற்று முடிந்த தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வங்கி அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய முகாமையாளர் இன்று இலங்கையிலுள்ள பல்வேறு வங்கிகளும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்ற போதிலும், அவறறில் எல்லாம் முதல் தரமானதாக கொமர்ஷல் வங்கி தனது நிலையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. தேசிய ரீதியிலும் உலக....விய ரீதியிலும் முன்னணியில் திகழும் வங்கி, தொழில் நுட்பரீதியிலும், தகவல் தொடர்பாடல் ரீதியிலும், பணப் பரிமாற்றத்திலும் பணியாளர்களின் திறமைகளிலும் அது முதல் தரம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

இராணுவ,பொருளாதார,அரசியல் ரீதியில் யாழ்.குடாநாட்டில் நெருக்கடி நிலைகள் காணப்பட்ட போதிலும் மக்களுக்குத் தனது சேவைகளை தொடர்ந்தும் வழங்கி வந்திருக்கிறது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் வங்கி மக்களுக்கு சேவையாற்றுவதற்கு எமது ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயறபட்டுள்ளனர். இந்தச் சேவையை நாம் தொடர்ந்தும் மக்களுக்கு வழங்குவோம்.

இன்று உலகளாவிய ரீதியில் வங்கிகளிடையே நிலவிவரும் போட்டிச்சூழ்நிலை காரணமாக ஒவ்வொரு வங்கியும் தத்தமக்கென வைததிருந்த பாரம்பரிய கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளை மாற்றி அமைத்து புதுப் புது வடிவங்களில் இச் சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

அந்த அடிப்படையில் முற்று முழுதாக மக்களின் சமூக நல மேம்பாடுகளைக் கருத்தில் கொண்டு கொமர்ஷல் வங்கியும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.இதனைத் தொடர்ந்து கொமர்ஷல் வங்கியினால் "அருணலு" பரிசுத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 14 பாடசாலைச் சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் அவர்களது பெற்றோர்களும்கௌரவிக்கப்பட்டனர்.(தி-4)

# கடந்த மார்ச் மாதத்தில் முல்லை வைத்தியசாலையில் 15,237 பேர் சிகிச்சை

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் கடந்த மார்ச் மாதத்தில் 15 ஆயிரத்து 237 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மருந்துத் தட்டுப்பாடு, மருத்துவா பற்றாக்குறை, கட்டடவசதியின்மை, மருத்துவ உபகரணங்கள் இன்மை போன்ற பல குறைபாடுகள் மத்தியில் இயங்கிவரும் இந்த வைத்தியசாலையில்,

நோயாளர் விடுதிகளில் தங்கி 959பேரும், வெளிநோயாளர் பிரிவில் 14ஆயிரத்து 278 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். இதே வேளை கடந்த ஜனவரி மாதம் 15ஆயிரத்து 787பேரும் பெப்ரவரி மாதம் 13ஆயிரத்து 364 பேரும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறறிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (தி-64,10)

## கலாசார மண்டபம் அமைப்பு

(நவாலி)

இணுவில் சனசமூக நிலையம் அப்பகுதியில் உள்ள கலைஞர்களின் நன்மைகருதி புதிதாக கலாசார மண்டபம் ஒன்றை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் அமைத்து வருகிறது.

இதற்குத் தேவையான நிதியினை இணுவில் சனசமூக நிலைய உறுப்பினர்கள் திரட்டி வருகினறனர். இம் மண்டபம் விரைவில் திறக்கப்படவுள்ளது. (தி-102)

# தேரரின் விகாரை தாக்குதல் தொழிலாளர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பே சோபித தேரர்வாசம் செய்த தலத்தை தாக்கியதுடன், அங்கு கறுப்புக்கொடி களைக் காட்டி அவரை அச்சுறுத்தியதை வன்மையாகக் கண்டிப்பதாக தேசியத் தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது, தேரா மக்களினால் பாராளு மன்றத் திறகு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் பாராளு மன்றத்தில் சபாநாயகர் தெரிவில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக் கும் உரிமை அவருக்கு உண்டு.

அந்த உரிமையை அச்சுறுத்துவது போலவும் கட்டுபபடுத்துவது போலவும் அவருடைய புத்த விகாரையைத் தாக்கியது ஜனநாயக ரீதியில் அனை வராலும் கண்டிக்கப் படவேண்டிய ஒரு விடயமாகும்.

ஜனநாயகம் இவ்விதமான செயற்பாடுகளினால பாதிக்கப்படு மானால் சிறுபான்மை மக்களின் உரிமைகளை எப்படி இவர்கள் அங்கீகரிப்பார்கள் என்ற சந்தேகம் எழுகிறது. இவ்வாறான வன்செயல்களைக் கட்டுப்படுத்துவது ஜனாதிபதியின கடமையாகும என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-121)


சிங்கப்பூரின் கதை

வரலாறு பேசுகிறது

லீ குவான் யு,



RS. 700/-

ஒரு மீளாய்வு

டாக்டர்

K.சிவம் M.V.sc.

நாடு உருவாக்க மாதிரி

யார் படிக்க வேண்டும்?~எல்லோரும்

எதிர்காலம் படைப்போர்
நாட்டுப் பற்றுடையோர்
சமூக நலன் விரும்பிகள்
வளர்ச்சிக்கு உழைப்போர்
இளைஞர்கள் யுவதிகள்
ஒவ்வொருவரும் முழு சமூகமும் படிக்க
வேண்டிய முழுமைச் சிந்தனைக் கருவூலம்

நாடு உருவாக்கிய கதை

| | |
|---|---|
| அடிப்படைகள்<br>எவ்வாறு<br>அணுகுமுறை<br>நல்லரசு<br>தவிர்க்கப்பட்டவை<br>கொள்ளப்பட்டவை | படித்த பாடங்கள்<br>நண்பர்கள்<br>எதிர்காலம்<br>சமூக கோட்பாடுகள்<br>எவ்வாறு எப்படி - இரகசியம |

**Publishers**

ASIAN TRADING HOUSE (PVT) LTD.
115, MESSENGER STREET,
COLOMBO 12, SRILANKA.
TEL: 2330359 FAX : + 94-11-2441915
E-mail : atrading@sri.lanka.net

(C-138)


# செய்தித் துளிகள்

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

வடமராட்சி தொண்டை மானாறு வீரமாகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்றுதிங்கட் கிழமை நடைபெறவுள்ளது.(தி-52)

## மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் நேற்று நள்ளிரவு 12.மணியுடன் முடிவடைகின்றது. மத்திய மாகாண சபையின் இறுதிக் கூட்டம கடந்த 22ஆம் திகதி சபைத் தலைவர் துரை மதியுரகராஜா தலைமையில் நடைபெறறது.

கண்டி,நுவரெலியா, மாத்தறை ஆகிய 3மாவட்டங்களை உள்ளடக்கிய இம் மத்திய மாகாண சபையில் 58 உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. இதேவேளை, ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகின்றது.

இதனால் ஊவா மாகாண சபைத தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் விரைவல்கோரப்படவுள்ளன. மேலும் மேல் மாகாணம், வட மத்திய மாகாணம் ஆகியவற்றுக்கான பதவிக்காலம் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைகின்றமையும இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10,121)

## தையல் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் போருட் நிறுவனத்தினால் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறியில் 25பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இப்பயிற்சி நெறி 3 மாதங்கள் இடம்பெறவுள்ளது. (உ -75)

## விரிவுரையாளர் பற்றாக்குறை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக்கல்லூரியில் பல்வேறு குறைபாடுகள் நிலவி வருவதால், அக்கல்லூரியில் புதிய பாட நெறிகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதாக கல்லூரி அதிபர் எம்.குணரட்ணம் கவலைதெரிவித்துள்ளார்.

சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்று வரும் இக் கல்லூரியில்,23 பாடநெறிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இதற்கு 28 விரிவுரையாளர்கள் தேவைப் படும் பட்சத்தில் தற்போது 11 விரிவுரையாளர்களே கடமையாற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-8)

## ஸ்கிறீன் பிறின்டிங் பயிற்சிநெறி

(காரைநகர்)

காரைநகர் கலாநிதி ஆதியாக ராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு ஸ்கிறீன் பிறின்டிங் சுயதொழில் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் சு. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

தீவக வலய முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் படவுள்ள இப்பயிற்சி வகுப்பில் அச்சுப்பதிக்கும் முறை, அழைப்பிதழ்கள், வளம்பரங்கள் என்பன குறைந்த செலவில் தயாரிக்கும் முறை என்பன பயிற்றுவிக்கப்படவுள்ளதாகவும் இப் பயிற்சிநெறிக்கு பாடசாலையை விட்டு விலகிய இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-246)

## ம்ஹோற்சவம்

(கல்வியங்காடு)

கல்வியங்காடு ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது. (தி-74)

## கால்நடைகளுக்கு தடுப்பு மருந்து

(சில்லாலை)

சில்லாலைப் பகுதியிலுள்ள வளர்ப்புக் கால்நடைகளுக்கான இலவசத் தடுப்பு மருந்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் சில்லாலை இன்னாசித்தம்பி வளவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதன்போது,கோழித்தூக்கத்திற்கான தடுப்புமருந்து வழங்கப் படவுள்ள அதேநேரம் ஏனைய மிருகங்களுக்கான வைத்திய ஆலோசனைகளும் இலவச மருந்துகளும வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-58)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிகது ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எகஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு திணைக்களங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-75)


அன்பு மாணவர்களே!

உங்கள் வலம்புரியில்

28. 04. 2004 புதன் தொடக்கம்

சுந்தரின்

5~ம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் வெளிவரும்.

மு. குறிப்பு: வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி நிலையத்தினர்கள்,

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக
உத்தியோகத்தர்.

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு -குறள்

வலம்புரி

# சமாதான முயற்சியில் நோர்வேயின் கடைமை

விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுக்க அனுசரணையாளராகச் செயற்படுமாறு நோர்வே அரசிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதியின் அழைப்பு வரவேற்கத்தக்கதென்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை. ஆயினும் ஜனாதிபதியால் நோர்வேக்கு விடுக்கப்பட்ட அழைப்பு எவ்வளது தூரம் இதய சுத்தியோடு கூடியதென்பதை பொறுத்தே அவரின் அழைப்பிற்கான வரவேற்பும் அமையும்.

சபாநாயகர் தெரிவில் கோட்டைவிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மிகப்பாரியதொரு பொறுப்பு காத்திருக்கின்றது. அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மைப் பலத்தை இப் பாராளுமன்றத்தில் நிரூபிப்பதே அப் பொறுப்பாகும்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவியை கோட்டைவிட்ட ஜனாதிபதிக்கு பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதில் பலத்த சிக்கல்கள் இருக்கவே செய்யும். ஹெல உறுமய தமக்கு ஆதரவாக நடந்து கொள்ளுமென எதிர்பார்த்த ஜனாதிபதிக்கு அது பலத்த ஏமாற்றத்தை கொடுத்திருந்தது.

இந்நிலையில் தனக்கிருக்கக்கூடியதான ஒரே வழி அவசர அவசரமாக சமாதான முயற்சிகளை தொடருமாறு நோர்வே அரசை அழைப்பதேயாகும்.

இவ்வாறு நோர்வே அரசை அழைப்பதன் மூலம் தனது சமாதான விருப்பை சர்வதேசத்திற்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்திக்கொள் முடியுமென ஜனாதிபதி எண்ணியிருக்கலாம். அவ்வாறாக ஜனாதிபதியின் அழைப்பு அமையுமாக இருந்தால் அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, நோர்வேக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓர் உறுதியான நிலைப்பாட்டிலேயே தனது அழைப்பை விடுத்திருக்க வேண்டும். மாறாக மீண்டும் ஒருதடவை நோர்வேயை, விடுதலைப் புலிகளை ஏமாற்றுவதாக அந்த அழைப்பு இருக்குமாக இருந்தால் எதிர்காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் வாழ்வுக்கு மக்கள் முற்றுப்புள்ளி வைக்கவே செய்வர்.

இங்கு ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாடென்பது ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சமாதான பேச்சுக்களின் தொடர்சியாக - விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுக்களை தொடரத் தயாராக இருக்க வேண்டும்.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாளராக செயற்படுமாறு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொண்ட நோர்வேக்கும் ஓர் முக்கிய கடைமைப்பொறுப்பு உண்டு.

அதாவது ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட நோர்வே சமாதான பேச்சுக்களைத் தொடர்வது குறித்து தமிழீழ விடுதலை புலிகளின் தலைமையுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும்.

அவ்வாறு புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் போது அதனை விடுதலைப்புலிகள் வரவேற்பர். ஆனால் தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்ட வரைபின் அடிப்படையிலேயே பேசமுடியும் என்ற நியாயப்பாட்டை அவர்கள் முன்வைப்பர்.

இதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால் மட்டுமே புதிய அரசுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் சாத்தியமாகும்.

இதனை விடுத்து மீண்டும் பூச்சியத்தில் இருந்து சமாதான முயற்சியை ஆரம்பிக்க ஜனாதிபதி விரும்புவாராயின் அது நடைமுறைக்கு சாத்தியமாக மாட்டாது. இந்நிலையில் நோர்வே விடுதலைப் புலிகளின் நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் சமாதானப் பேச்சை தொடருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இது நோர்வேயின் சமாதான முயற்சியில் முக்கிய பணியாகும்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கை மக்களுக்கு மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது

## சட்டத்தரணி எம்.எம்.அப்துல்கலாம்

(கொழும்பு)

உண்மை, நேர்மை,திறமை, ஒழுக்கம்,பொறுமை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய பாராளுமன்றத்தில் சில கட்சிகள் அநாகரிகமாக நடந்துகொளவது பெரும் கவலையைத் தருகின்றது.

இவ்வாறு பிரபல சட்டத்தரணி எம்.எம். அப்துல்கலாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பில் சில கட்சிகள் நடந்து கொண்டவிதம் இலங்கை மக்களுக்கே கடும் அதிருப்தியையும் வேதனையையும் ஏற்படுதியிருக்கின்றது.

சில கட்சிகளின் அநாகரிகமான செயற்பாட்டால் சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு அன்றைய தினம் மூன்று முறை நடந்திருக்கின்றது.

இது நாட்டிற்கே பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இதன் மூலம் கட்சிகளின் ஒற்றுமையின்மை, விட்டுக்கொடுககாமை, மற்றவரை மதியாமை ஆகிய சுயரூபங்களும வெளிப்பட்டிருக்கின்றன.

இத்தகைய குண இயல்புகளையுடைய மக்கள் பிரதிநிதிகள, நாட்டில் உள்ளவரை சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

இதேவேளை, கடந்த 2 வருடகாலமாக ஜனாதிபதி எதிர்க்கட்சியிலும், பிரதமர் ஆளும் கட்சியிலும் இருந்ததால் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இருவருக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

ஆனால்,தற்போது அப்படியெல்லாம் சாட்டுப்போக்குக் கூற முடியாது. ஜனாதிபதியும்,பிரதமரும் ஒரே கட்சியில் உள்ளவர்கள் என்பதால் இருவரும் ஒருமித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம்.

இதற்கிடையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்துவிட்டார்கள்.

ஆனால், தற்போது அப்படியில்லை. எதிாக்கட்சிகள் சமாதான நடவடிக்கைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றன.

எனவே,சமாதானத்தை உருவாக்குவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றே கூறவேண்டும்.

இருந்தாலும் இரு பெருங்கட்சிகளுடனும் கூட்டுச்சேர்ந்துள்ள இதரகட்சிகள் சமாதானத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைபபு வழங்குமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏனெனில, பாராளுமன்ற சபாநாயகர் தெரிவு வாக்கெடுப்பு நிகழ்வல் அவர்கள் நடந்து கொண்ட விதத்தை அனைத்து மக்களும் தொலைக்காட்சி ஊடாகப் பார்த்திருப்பார்கள்.

அத்துடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொள்வது மக்களுக்குத்தான் அவமானத்தை ஏற்படுத்தும்.

எனவே,எதிர்வரும் காலங்களிலாவது இவர்கள் உத்தம புருஷர்களாக உதாரண புருஷர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

அததுடன், சபாநாயகரும் பக்கச்சார்பின்றி நடந்து கொள்ள வேண்டும். இதேவேளை,பார்ாளுமன்றத்தில் நடைபெறும் இத்தகைய அநாகரிகமான செயற்பாடுகளுக்கு தற்போதுள்ள அரசியல் யாப்பும் காரணமாக அமைகின்றது.

இதனால் அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தற்போது எடுக்கும் முயற்சிகளை வரவேற்கின்றோம்.

இதேசமயம் அரசியல் யாப்பு பெரும்பான்மையின மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் மட்டும் திருத்தி அமைக்கப்படக்கூடாது

சிறுபான்மையின மக்களின் நலன்களையும் பாதுகாக் கும் வகையில் சீர்திருத்தப்படவேண்டும. அவ்வாறானால் தான இனப்பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வுகாண முடியும் என்றார். (உ-60,10)

# விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி

(இருபாலை)

நிக்கொட் உதவித்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கான பழமரச்செய்கை தொடர்பான வதிவிடப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 3 நாட்களுக்கு இப் பயிறசி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வோருக்குத் தங்குமிட வசதியும,உணவும் வழங்கப்படும். குறித்த 3 தினங்களும் பயிற்சி நடைபெறும். மேற்படி பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்தே பயிற்சிகளில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்படி பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடின்றி ஆர்வலர்கள அனைவரும் பங்குபற்ற முடியும்.

இதேவேளை, பயிற்சியின முடிவில் இதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-84)

# ஹெல உறுமய தேரர்களுக்கு பிரதமர் தானம் வழங்கினார்

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றில் கடுமையாக அரசாங்கத்தை ஜாதிகஹெல உறுமயவினர் விமர்சித்துள்ள வேளையில் அவர்களைச் சமாதானப்படுத்தும் நோக்குடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஹெல உறுமய உயர் மட்ட பிக்குகளுக்கு தானம் வழங்கியுள்ளார்.

பிரதமர் தனிப்பட்ட ரீதியில் வாகனம் அனுப்பி ஹெல உறுமயவினரை அலரி மாளிகைக்கு அழைத்துவருமாறு தனது சகோதரரை ஹெல உறுமயின் தலைமையகமான "அசப்புவ" விற்கு அனுப்பியிருந்தார்.

இதன்போது பிரதமர் அரசியல் ரீதியாக எந்த நோக்கமும் கொண்டு செயற்படவில்லை என ஹெல உறுமயவின தலைவர் எல்லாவல மெதானந்த தேரர் தெரிவித்தார். அத்துடன், தாம் இவ்வழைப்பை ஒரு நல்லெண்ணத்துடன் ஏற்றுக்கொண்டோம்.

அங்கு, நாம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிறகு எமது ஆசிகளை வழங்கினோம். தவிர இச்சந்திப்பு அரசியல் நோக்கங்களுக்கானதல்ல. முழுவதுமாக சமயம் சார்ந்தது என்றும் தேரர் தெரிவித்தார். (தி-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நம்பிக்கையுடன் இரு. கடவுளை முற்றிலும் சரணடை. அங்ஙனமாயின் நீ தானாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. உனது பொறுப்பை கடவுளே ஏற்றுக்கொள்வார். எண்ணெய் இல்லாது விளக்கு எரியாதது போல் கடவுளில்லாது மனிதனும் வாழ முடியாது.

*சுவாமி விவேகானந்தர்*

# கொடுக்கல வாங்கல் நேரம் குறைப்பு

(ஊர்காவற்றறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளை தனது வாடிக்கையாளருடனான கொடுக்கல் வாங்கல் நேரத்தினைக் குறைத்துள்ளது.

இக்கிளை தனது வாடிக்கையாளருடனான கொடுக்கல் வாஙகல் நேரத்தை காலை 9.00மணிமுதல் மதியம் 12.00மணி வரையுமாகக் குறைத்துள்ளது.

கடந்த காலங்களில் காலை9.00மணிமுதல் பிறபகல் 1.30 மணிவரையும் இவ்வங்கிக்கிளையின் சேவை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்நேரக்குறைப்பினால் தூர இடங்களில் இருந்து செல்லும் வாடிக்கையாளர்கள் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது திரும்பவேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரியவருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் வங்கிகள் வாடிக்கையாளருடனான கொடுக்கல் வாங்கல் நேரத்தினை காலத்திற்குக்காலம் அதிகரிதது வரும் இவ் வேளையில் இவ் வங்கிக்கிளையின் நேரக்குறைப்புக் குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (உ-75)

# ஒழுங்குபடுத்தலின் கீழ் மணல் விநியோகம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்தில் புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான மணல் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். செயலகத்தில் இருந்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க அதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி பதில் பிரதேச செயலராகப் பணியாற்றி தற்போது யாழ். செயலகத்தில் பணியாற்றிய ஆர். சிவபுண்ணியம் என்பவரே இம் மணல விநியோகத்திற்குப் பொறுப்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை தும்பளையில் இயங்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் உபஅலுவகத்திலிருந்து மணல் விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மணல் வழங்குவதற்கான நடைமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி மணல் அனுமதிப் பத்திரம் வழங்கும் விபரங்கள் திங்கட்கிழமைகளில் சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும், செவ்வாய்க்கிழமைகளில் கோப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலர்பிரிவுகளுக்கும், புதன்கிழமைகளில் நல்லூர், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும்,வியாழக்கிழமைகளில் பருத்தித்துறை, தீவகம், தெல்லிப்பழைப்பிரதேச செயலர் பிரிவுகளுக்கும், வெள்ளிக்கிழமைகளில் கரவெட்டி, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

## நோர்வேக்கு...

விக்கின்றன.

இந்நிலையில், நடந்துமுடிந்த வடமேல்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினருக்கு பொதுத்தேர் தலில் மக்கள் வழங்கிய ஆணையை மேலும் உறுதிப்படுத்தியிருப்பத னால், சமாதான முயற்சிகளை ஜனா திபதி முன்னெடுப்பதற்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஐ.தே.மு. அரசு புலிகளுடன பேச்சுவார்த்தையை நடத்தியபோது நோர்வேயின் மத்தி யஸ்தத்தை எதிர்த்த ஜே.வி.பி, தற்போது ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கு அழைப்பு விடுத்தபோதிலும் அது தொடர்பாக ஜே.வி.பி. கருத்து எதனையும் வெளியிடாது மௌனம் சாதித்து வருவது அரசியல் அவதானி கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## மாகாண...

துரையாடினார். படை அதிகாரிகளு டனான கலந்துரையாடல்களை முடித்துக் கொண்ட அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பினார்.

முன்னதாக யாழ். நகரப் பகு திக்கு வந்த அமைச்சருடன் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், யாழ். நூலகத்தையும் கூட்டிச்சென்று காண்பித்தார்.

நூலகத்திற்குச் சென்ற அமைச்சர் அங்கு உள்ள ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன், நூலகத் தில் நிலவும் குறைபாடுகள் பற்றி கேட்டறிந்தார். புதிய அரசாங்கம் பதவியேற்ற கையோடு அமைச்சர் ஒருவர் குடாநாட்டிற்கு முதற்தடவை யாக திடீர் விஜயம் மேற்கொண்டு படை அதிகாரிகளுடன் கலந்து ரையாடிச் சென்றிருபபது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# ஹெல உறுமய எம்.பிகளுக்கு எதிரான வன்முறைகளை உடன் விசாரிக்குக

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பௌத்த பிக்குமார் அரசியல் நீரோட்டத்தில் ஈடுபடும்போது எதிகொள்ளும் பல் வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயுமாறு பொலிஸாரைப் பணித் திருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியலில் தற்போது புதிதாக ஈடுபட்டுள்ள பிக்குமாருக்கு எதி ராக பல்வேறு நெருக்கடிகள், அச் சுறுத்தல்கள், மிரட்டல்கள் விடுக் கப்படுவதாக கடந்தசில நாட்களில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இத்தகைய சம்பவங்களோடு தொடர்புடைய நபர்களுக்கு எதி ராக சட்டநடவடிக்கை எடுக்கப் படும். ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பே சோபித தேரர் வசிக்கும் எம் பலப்பிட்டிய கிங்குருகால தர்ம நிலையத்தில் கறுப்புக்கொடிகளை ஏற்றியமை தொடர்பாக இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர் பாக முறையான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இதேபோன்று பேருவளைப் பகு தியில் விகாரை ஒன்றிலிருந்த விகாராதிபதியை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாகவும் தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொள்ளு மாறு மேல் மாகாண தென்பிராந் திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மகரகம பகுதி யில் நேற்றுக்காலை ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிரான சுவரொட் டிகளை ஒட்டிக்கொண்டிருந்த நபர் களுக்கு எதிராகச் சட்ட நடவடிக் கைகள் எடுத்திருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

(த-121)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனித உரிமை கள் ஆணைக்குழுவின் ஏற்பாட் டில் கூட்டுறவுச் சங்கத்தலைவர் கள், உப தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக் கான கலந்துரையாடல் ஒன்று நாளை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கருத்தரங்கில் சகல கூட் டுறவுச் சங்கத் தலைவர்கள், உப தலைவர்கள், பொது முகாமையா ளர் ஆகியோரைக் கலந்துகொள்ளு மாறு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனக சபாபதி கேட்டுக்கொண்டுள்ளார். (வ)

## அமெரிக்கத்...

யம் அமையவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இவ் வைத்தியர் சேவையில் பிளாஸ்ரிக் மற்றும் இருதய சத்திர சிகிச்சைகள் என்பன நடாத்தப்பட வுள்ளன. (த-121)

## வடமேல்...

யக் கட்சி 8 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

குருநாகல், புத்தளம் மாவட்டங் களில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குவிபரம் வருமாறு,

குருநாகல் மாவட்டத்தில் ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி 3 இல்ட்சத்து 62ஆயிரத்து 84 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சி 2 இலட்சத்து 15 ஆயிரத்து 905 வாக்குகளும்,

புத்தளம் மாவட்டத்தில் ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு இலட் சத்து 28ஆயிரத்து 976 வாக்குகளும் ஐக்கியதேசியக் கட்சி 95 ஆயிரத்து 868 வாக்குகளும் பெற்றுள்ளன. (ம)

## பெருமளவு...

பாக்கிகள் போன்ற 615 ஆயுதங் கள் உள்ளன. இதைவிட இலங்கை இராணுவத்தால் பயிற்றுவிக்கப்பட்ட 800 பாதுகாப்புப் படையினரும் பல்வேறு மாவட்டங்களில் பணிக்க மர்த்தப்பட்டுள்ளனர்.

மகாவலித்திட்டத்தின்கீழ் உள் ளடக்கப்பட்டுள்ள 5 பாரிய நீர்மின் உற்பத்தித் திட்டங்கள், 200 நீர்க் கால்வாய்கள் என்பனவற்றைப் பாதுகாக்க 600 ஆயுதம் தாங்கிய படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இவைகள் அனைத்தும் மகாவலி அமைச்சினுள் அடங்குவதால், இவற்றைப் பயன்படுத்தும் நோக் கில் ஜே.வீ.பியினர் மகாவலி அமைச்சின்மீது கண்வைத்திருக் கலாமென நம்பப்படுகின்றது.

(த-6)

## தன்னை எம்.பியாக...

பகஷவையும் ஜனாதிபதி தயாராக வைததுள்ளார். இவர்களில் எவ ரேனும் ஒருவர் நியமிக்கப்படலாம்.

இதேவேளை, இ.ஏ.டி.சி. வீர சேகரா இராஜிநாமாச் செய்துள் ளதையடுத்து அவரின் இடத்திற்கு நியமிக்கப்படவுள்ள மேற்படி இரு வருள் ஒருவரே அரசியல் அமைப்பு விவகாரப் பிரதியமைச்சராக இருப் பார். அத்துடன், ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் ஜனதாஸ பீரிஸ் தனது தேசியப் பட்டியல் எம்.பிப் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டார்.

மேலும், தனது கணவர் மேவின் சில்வாவிற்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் அவரது மனைவி மேரி லூசிடா தனது பதவியை இராஜி நாமாச் செய்துள்ளார்.

ரத்வத்தையின் கோரிக்கையால் அரசியல் அமைப்பு விவகார பிரதி அமைச்சர் பதவி நியமனத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அத் துடன், அமைச்சரவை உறுப்பினர் களின் எண்ணிக்கை 35ஐ மீறி விடும் சிக்கல்களும் ஏற்பட்டுள் ளன.

(த-6)

## அரசியலமைப்பை மாற்றும் முயற்சிக்கு...

தொடர்ந்து பேசுகையில்,

பாராளுமன்ற சபாநாயகர் பத விக்காக நடத்தப்பட்ட தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வகுத்த அரசியல் வியூகங்களில் அழுத் தங்கள் காரணமாகவே ஜனாதி பதி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இப்போது நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்கள் தமது ஏகோபித்த ஆணையை வழங்கியுள்ளனர். அந்த ஆணை யைப் புறந்தள்ளிவிட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக நாம் எக் கட்டத்திலும் ஜனாதிபதியிடம் சர ணாகதி அடையமாட்டோம். நாம் எமது கொள்கையிலும், இலட்சி யத்திலும் மிகவும் இறுக்கமாக உள்ளோம். எமது மக்களின் தீர்ப் புக்கும் ஆணைக்கும் மதிப்பளியாத எந்தவொரு சக்தியுடனும் நாம் உறவுகொள்ளமாட்டோம் இது உறுதி.

தமிழீழ விடுதலைப் புலிகளி னால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக் கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபினை அரசு ஏற்கவேண் டும். அதன்மூலம் எமது மண்ணில் ஆட்சி செய்யக்கூடிய அதிகாரம் எமக்குக் கிடைக்கவேண்டும். இன் றைய நிலையில், எமது கட்சி யின் நிலைப்பாடு, சர்வதேச இராஜ தந்திரிகளின் கவனத்தைப் பெரு மளவு ஈர்ந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வழிகாட்டலில் நாம் எமது அர சில் காய் நகர்த்தலைத் தந்தி ரோபாயங்களின் அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றோம். இலங்கைப் பாராளுமன்றத்தில் நாம் இன்று மூன்றாவது பலம் பொருந்திய சக்தியாக மிளிர்ந்து வருகின்றோம். எமது இலட்சியம் ஈடேறும்வரை நாம் அர்ப்பணிப் புடன் தொடர்ந்து பாடுபடுவோம்.

முந்திய பாராளுமன்றத்தில் இருந்தவர்களைவிட இன்றைய பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் தமிழர்களின் தன்னாட்சி அதிகார சபையை தீவிரமாக எதிர்ப்பவர் கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று அரசாங்கத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் காரணமாகவே மந் திரிப் பொறுப்புக்களை ஏற்கமுடி யாமல் இருக்கின்றார்கள். மகா வலி அதிகார சபையையும், அமைச் சையும் தரும்படி ஜே.வி.பியினர் அழுத்தம் கொடுத்து வருகின்ற னர். இந்த நிலையில், இந்த அர சாங்கத்தின் நிலைப்பாடு எப்படி இருக்குமோ தெரியாது.

இந்த நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியை நன்கு கட்டி வளர்த்து அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்கவேண்டும். இளம் சந் ததியினரைக் கட்சிப் பணிகளில் ஈடுபடுத்தவேண்டும். நாம் அரசிடம் கேட்கின்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கிடைக்குமாயின், நாம் எமது பிரதேசங்களில் அபி விருத்தி, புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்படும்.

நாம் எமது கட்டமைப் புக்களை மிகவும் கவனமாக ஆக் கிக்கொள்ளவேண்டியுள்ளது. இலட் சியவாதிகள் படிப்படியாக எம் மத்தியில் தமது பணிகளைச் செய்ய முன்வரவேண்டும். தேர் தலில் போட்டியிடுவதும் வெல் வதும்தான் எமது இலட்சியம் என்று இருக்கக் கூடாது. கொண்ட கொள் கையில் வெற்றிதான் முக்கிய மாகும்.

அரசாங்கம் இனியும் தாமதி யாது, உடனடியாகத் தமிழீழ விடு தலைப் புலிகளிடம் இடைநிறுத் தப்பட்ட பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். பேச்சுவார்த் தையில் தமிழீழ விடுதலைப் புலி கள் ஏற்றுக்கொண்டால்தான் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க முடியும்.

ஜனாதிபதி சந்திரிகா எமது மக்களின் தீர்ப்பினை மதியாது டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச் சுப் பதவியை அளித்ததன் மூலம் எமது மக்களின் ஆணையை அவர் அகௌரவப்படுத்தியுள்ளார் என்று தான் நாம் கருதுகிறோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தந்தை செல்வா காட்டிய அரசி யல் வழிகளில் செல்கின்ற நாம் பேரினவாதக் கட்சிகளுக்கோ அல் லது தென்னிலங்கைக் கட்சிக ளுக்கோ நாம் எக்கட்டத்திலும் ஆதரவளிக்கமாட்டோம்.

இந்த நாட்டில் இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணயம், தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம் என்ற அடிப்படையில் அரசாங்கம் தீர்வினைக் காண முன்வரவேண் டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எக்கட்டத்திலும்கூட அரசாங்கத் திற்கு முண்டுகொடுக்கின்ற நிலைப் பாட்டக்கு வரமாட்டாது என்று குறிப்பிட்டார். (தி-16)

சங்குநாதம்


யாப்பை மாற்ற ஜனாதிபதி ஏன் பொறி அமைக்கிறார்?
-கோவையூர் ஜெயன்
கூட்டமைப்பு எம்.பிக்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்
-டொறிங்ரன்
கே.வி. குணசேகரம் எழுதும்
கல் தூண்கள்
வியாசர் பதில்கள்
ஆலடி மாநாடு
சினிமாச் சிதறல்
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்
விலை ரூபா 15.00

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.